# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க,
## நில அளவைச் சட்டம்

---

(2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, ஒற்றோபர் மாதம் 4 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 42.50 தபாற் செலவு : ரூபா 11.25

# 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ—ஓ $\frac{36/98}{4265}$

**நில அளவையாளர் தலைமை அதிபதியின் தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் ; நில அளவைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் நில அளவையாளர்களின் உயர்தொழில்சார் நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்கான நில அளவைப் பேரவையொன்றைத் தாபிப்பதற்கும் ; நில அளவைக் கட்டளைச் சட்டத்தையும் நில அளவையாளர் கட்டளைச் சட்டத்தையும் நீக்குவதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

## பாகம் I

*நில அளவையாளர் தலைமை அதிபதியின் தத்துவங்களும் பணிகளும்.*

2. நில அளவையாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும் பணிகளும் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் —

(அ) இலங்கையில் எல்லா நில அளவைச் செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தல் ;

(ஆ) தேசிய புவிப்பரப்பளவைக் கணிப்பியல்சார் கட்டுப்பாட்டு வலையமைப்பைத் தாபித்து நிருவகித்தல் ;

(இ) கடத்திரள் புவிப்பரப்பளவுக் கணிப்பியல்சார் மற்றும் பிரதேசவியல்சார் நில அளவைகளுக்கான செம்மையின் நியமங்களைக் குறித்துரைத்தல் ;

(ஈ) படமாக்கலுக்கான நியமங்களை விதித்தல் ;

2-H 015587-700 (2002/07)

(உ) 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் நில அளவைகளைக் கொண்டு நடாத்த நாடும் பதிவுபெற்ற நில அளவையாளர்களுக்கான மதிப்புக் கணிப்பீட்டு முறைமையொன்றைத் தாபித்து நிருவகித்தல் அத்துடன் மதிப்புக் கணிப்பீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்ட நில அளவையாளர்களின் இடாப் பொன்றைப் பேணுதல் ;

(ஊ) நில அளவை உபகரணங்களினதும் இலத்திரனியல் சார் தூர அளவீட்டு உபகரணங்களினதும் அளவு வகுத்தலுக்கான தளக்கோடுகளைத் தாபித்து எல்லா நில அளவையாளர்களுக்கும் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் ;

(எ) நிலம் பற்றிய தகவல்களை ஒன்று சேர்ப்பதற்கான முழுமையான அடிப்படையாக இருப்பதற்காக நிலவுரித்து அளவை வரைபடங்கள் மற்றும் நிலப்படங்கள் என்பன தயாரிக்கப்படுவதற்கு உதவக் கூடியவாறாக நிலவுரித்து அளவைப் பதிவேடு களைப் பெற்றுக்கொள்ளுதல், அங்கீகரித்தல் அத்து டன் பேணுதல் ;

(ஏ) பிரதேசவியல், குறிக்கோள் மற்றும் விசேட நோக்கஞ்சார் நிலப்படங்களைத் தயாரித்தல் மற்றும் அவை பற்றிய பதிவேடுகளைப் பேணுதல் ;

(ஐ) நிலம் அளத்தல் மற்றும் நிலப்படம் வரைதல் பூகோள அடிப்படையிலான தகவல் மற்றும் நிலம் பற்றிய தகவல் முறைமைத் தேவைப்பாடுகளுடன் கூடிய நிலம் தொடர்பான தகவல் என்பன ஒன்று சேர்க்கப்படுவதை மேம்படுத்தும் நோக்கத்திற்காக எல்லாத் தரவுகளையும் எவ்வடிவத்திலும் பெறுவ தற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு அத்துடன் பரிமாற் றம் செய்வதற்குப் பொறுப்பான பிரதான அதிகாரி யாக இருத்தல் ;

(ஒ) நிலம் அளத்தல், நிலம் பற்றிய தகவல் மற்றும் நிலம் சம்பந்தமான உறவுபட்ட சேவைகள் என்பன வழங்குதல் ;

(ஓ) பிரதேசவியல்சார் நிலவுரித்துசார் மற்றும் மூலத்திலிருந்து பெறப்பட்ட நிலப்படங்கள் தொலையுணர்வுச் செயற்பாட்டுத் தரவுகள் வான்வழிப் புகைப்படங்கள் மற்றும் வேறு நில அளவை அத்துடன் நிலப்படம் வரைதல் ஆவணங்கள் என்பனவற்றைப் பெறுதல், களஞ்சியப்படுத்தல், மீளத்தயாரித்தல் அத்துடன் விநியோகித்தல் ;

(ஔ) பொருத்தமாக இருக்குமிடத்து திணைக்களத்தால் பதிவு செய்யப்பட்டிருக்கும் நில அளவை மற்றும் நிலம் பற்றிய தகவல் பயன்படுத்துவதற்கு அல்லது மீளத் தயாரிக்கப்படுவதற்கு அதிகாரமளித்தல் அத்துடன் அத்தகைய தகவலைப் பயன்படுத்துவதற்கு அல்லது மீளத் தயாரிப்பதற்குக் கட்டணமொன்று அறவிடுதல் ;

(க) தேவையானவிடத்து நிலம் அளத்தல், நிலப்படம் வரைதல், அத்துடன் நிலஞ்சார் தகவல் தொழில் நுட்பத்தைப் பரிமாற்றம் செய்வதற்காக, வெளிநாட்டு முகவர் நிலையங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் ;

(ங) நிலம் அளத்தல், நிலப்படம் வரைதல் மற்றும் நிலம் பற்றிய தகவல் செயற்பாடுகள் மற்றும் இவற்றோடு தொடர்புபட்ட கருமங்கள் மீது ஏதேனும் அரசாங்க திணைக்களத்துக்கு ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்திற்கு அல்லது வேறு நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குதல் அத்துடன் அவ்வாறு வழங்கப்பட்ட ஆலோசனைக்காக அத்தகைய கூட்டுத்தாபனத்திடமிருந்து அல்லது அத்தகைய நிறுவனத்திடமிருந்து கட்டணமொன்று அறவிடுதல் ;

(ச) நிலம் அளத்தல் தொடர்பான கருமங்கள் தொடர்பில் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஆராய்ச்சியை நடாத்துதல் ;

(ஞ) நில அளவையாளரின் வெளிக்களக் குறிப்புகளைப் பயன்படுத்தி நில அளவை வரைபடமொன்றைத் தயாரிப்பதற்கும் பதிவுபெற்ற எவரேனும் நில அளவையாளரின் பயன்பாட்டுக்கென நில அளவை வரைபடமொன்றின் இடப்பரப்பைக் கணிப்பதற்கும் தகுதிவாய்ந்தவராய் இருக்கும் ஆளெவருக்கும், பரீட்சைகள் நடாத்துவதன் மூலம் அத்தகைய ஆளின் தகுதிபற்றித் தம்மால் திருப்திப்படுத்திய பின்னர் படவரைஞர் ஒருவராகப் பணிபுரிவதற்கு ஏதேனும் ஆளுக்கு அதிகாரமளித்து சான்றிதழ்கள் வழங்கல் ; அத்துடன்

(ட) நில அளவைத் திணைக்களத்தில் நில அளவைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் ஆட்களிடையே உயர்ந்த தொழில்சார் தராதரங்கள் பேணப்படுவதை உறுதி செய்தல்.

*நில அளவையாளர் தலைமை அதிபதியின் தத்துவங்களையும் பணிகளையும் கையளித்தல்.*

**3.** (1) நில அளவையாளர் தலைமை அதிபதி, இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியை அவரது கையொப்பத்தின் கீழான எழுத்து மூலம், காலத்துக்குக் காலம் அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படக் கூடியவாறான நில அளவைத் திணைக்களத்தின் அத்தகைய அலுவலர் எவருக்கும் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தத்துவம் அல்லது பணி எதுவும் எவ்வலுவலருக்குக் கையளிக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வலுவலர் ஒவ்வொருவரும் நில அளவையாளர் தலைமை அதிபதியின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைய, அத்தத்துவத்தை அல்லது பணியை பிரயோகித்தல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

*நிலம் அளத்தல் அல்லது நிலப் படம் வரைதல் தொடர்பிலான ஏதேனும் வினா பற்றி நில அளவையாளர் தலைமை அதிபதியின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.*

**4.** நிலம் அளத்தல் அல்லது நிலப்படம் வரைதல் தொடர்பிலான ஏதேனும் நில அளவையாளர் தலைமை அதிபதியின் முடிவானது, இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

5. (1) நில அளவையாளர் தலைமை அதிபதி, தேசிய புவிப்பரப்பளவுக் கணிப்பியல்சார் கட்டுப்பாட்டு முறைமை தாபிக்கப்படுவதற்கும், பேணப்படுவதற்கும், அவசியமானவிடத்து, தரமுயர்த்தப்படு வதற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

தேசிய புவிப்பரப்பளவுக் கணிப்பியல்சார் கட்டுப்பாட்டு முறைமை தாபிக்கப் படுதலும் பேணப் படுதலும்.

(2) தேசிய புவிப்பரப்பளவுக் கணிப்பியல் சார் கட்டுப்பாட்டு முறையுடன் இணைக்கப்பட வேண்டிய நில அளவைகளின் வகுதிகள் மற்றும் எம்முறையில் அத்தகைய நில அளவைகள் இணைக்கப்படல் வேண்டும் என்பன, விதந்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(3) தேசிய புவிப்பரப்பளவுக் கணிப்பியல் சார் கட்டுப்பாட்டு முறைமை தாபிக்கப்படுவதற்கு, பேணப்படுவதற்கு மற்றும் சீர்திருத்தப்படுவதற்குத் தேவைப்படும் நில அளவை ஒவ்வொன்றும் தேவைப்படும் நில அளவையாளர் தலைமை அதிபதியின் பணிப்பின் கீழும், மேற்பார்வையின் கீழும் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) நில அளவையாளர் தலைமை அதிபதியின் அத்தகைய நில அளவைகள் முக்கியத்துவம் வாய்ந்தன என அவர் அபிப் பிராயப்படுகின்றவிடத்து, தேசிய புவிப்பரப்பளவுக் கணிப்பியல்சார் கட்டுப்பாடு வலையமைப்பைப் பேணும் அத்துடன் தரமுயர்த்தும் நோக்கத்திற்காக எவரேனும் பதிவுபெற்ற நில அளவையாளரால் கொண்டு நடாத்தப்படும் நில அளவைகளைச் சேகரித்து ஒப்பிட்டுப்பார்த்தல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக, நில அளவையாளர் தலைமை அதிபதி, பதிவு பெற்ற நில அளவையாளர் எவருக்கும், அவரின் உடைமையில் உள்ள நிலப்படங்களை அல்லது வரைபடங்களைத் தமக்கு கொடுத்துதவுமாறு வேண்டுகோள் விடுக்கலாம், அத்துடன் அத்தகைய வேண்டுகோளுடன் இணங்கியொழுகுவது, அத்தகைய நில அளவையாளரின் கடமையாதல் வேண்டும்.

6. நிலம் அளத்தல் மற்றும் நிலப்படம் வரைதல் என்பவற்றுக்கான வான்வழிப் புகைப்படம் எடுத்தல்கள் யாவும், நில அளவையாளர் தலைமை அதிபதியின் பணிப்பின் கீழும் மேற்பார்வையின் கீழும் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

வான்வழிப் புகைப்படம் எடுத்தல்.

படங்கள்.

7. (1) இலங்கையில் தேசிய பிரதேசவியல்சார் நிலப்படம் வரைதல்கள் யாவும், நில அளவையாளர் தலைமை அதிபதியின் பணிப்பின் கீழும் மேற்பார்வையின் கீழும் கொண்டு நடாத்தப்படல் வேண்டும்.

(2) நில அளவையாளர் தலைமை அதிபதி, அவ்வாறு செய்வது பொருத்தமானது என அவர் கருதுகின்றவிடத்து —

(அ) எல்லாப் பொது மற்றும் விசேட நோக்கத்திற்கான நிலப்படங்களையும் தயாரித்து, நாளதுவரை ஆக்குதல் வேண்டும் ;

(ஆ) வரைபடங்களையும் நிலப்படங்களையும் நுண்படச் சுருளில் அல்லது சுவடிக்காப்புத்தரம் வாய்ந்த வேறு ஏதேனும் ஊடகத்தில் எண்மான உருவடிவத்தில் களஞ்சியப்படுத்தல் வேண்டும் ;

தகவல் தளங்கள்.

8. நில அளவையாளர் தலைமை அதிபதி, படிப்படியாக முழு இலங்கையையும் மேவக்கூடியவாறு புவியியல்சார் தகவல் தளம் ஒன்றையும், நிலவுரித்துசார் தகவல் தளம் ஒன்றையும் எண்மான உருவடிவத்தில் அல்லது ஏதேனும் வேறு வடிவத்தில் பேணுதல் வேண்டும்.

நில அளத்தல் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும்.

9. எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கிக் கொண்டுநடாத்தப்படும் நில அளவைகள் யாவும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும்.

நிலவுரித்துசார் வரை படங்களையும் நிலப்படங்களையும் தயாரித்தல்.

10. (1) நில அளவையாளர் தலைமை அதிபதி, உரித்துப் பதிவுச் சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், ஏதேனும் வேறு சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், படிப்படியாக முழு இலங்கையையும் மேவக்கூடியவாறு எல்லா நில உரித்து நிலப்படங்கள் தயாரிக்கப்படுவதற்கும் பேணப்படுதவதற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

(2) உரித்துப் பதிவுச் சட்டத்தின் நோக்கத்திற்காக, நில உரித்துசார் அளவைகள் —

(அ) நில அளவைத் திணைக்களத்தில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ள ; அல்லது

(ஆ) 41 ஆம் பிரிவின் நியதிகளுக்குகிணங்க வழங்கப்பட்ட வருடாந்த தொழில்புரி உரிமம் ஒன்றை வைத்திருப் பதுடன் 11 ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க அங்கீகாரச் சான்றிமொன்றைப் பெற்றிருக்கின்ற வரும், பதிவு செய்யப்பட்ட நிலவளவையாளர், அப்பிரிவின் நோக்கத்துக்காக நடாத்தப்பட்ட நிலவுரித்துசார் நில அளவைகளை அடிப்படையில் அவரால் தயாரிக்கப்பட்ட நிலப்படங்களையும் வரைபடங்களையும் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

அத்துடன் நில அளவையாளர் தலைமை அதிபதியிடமிருந்து மதிப்புக் கணிப்பீட்டுச் சான்றிதழ் பெற்றிருக்கின்ற, பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவரால் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும். அத்தகைய நில அளவைகளின் விளைவாக தயாரிக்கப்பட்ட நிலப்படங்களும் வரைபடங்களும், அத்தகைய பதிவுபெற்ற நில அளவையாளர்களால் அத்தாட்சிப்படுத்தப் படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட எல்லா நிலவுரித்துசார் நிலப்படங்களும் வரையடங்களும், நில அளவை யாளர் தலைமை அதிபதியினால் அல்லது அதற்கென நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட பதிவு பெற்ற நில அளவையாளர் ஒருவரினால் பரிசோதனை செய்யப்படல் வேண்டும். அத்துடன் அத்தகைய நிலப்படங்களும் வரைபடங்களும் சரியாக இருக்கின்றன என அவர் திருப் திப்படுகின்றவிடத்து, அது நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அல்லது அத்தகைய பதிவுபெற்ற நில அளவையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) அரச நில எல்லைக் குறிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், காணி உரித்துப் பதிவுச் சட்டத்தின்கீழ் நிலவுரித்துசார் நிலப்படங்கள் தயாரிக்கப்படு வதற்காக நில அளவை செய்யப்பட்ட எல்லைகள் தொடர்பில், ஏற்புடையனவாதல் வேண்டும்.

நில அளவையாளர் தலைமை அதிபதி மதிப்புக் கணிப்பீட்டுச் சான்றிதழ் வழங்குதல் வேண்டும்.

11. (1) நில அளவையாளர் தலைமை அதிபதி –

(அ) நில அளவையாளர் ஒருவர், நில அளவைப் பேரவையில் பதிவு செய்துகொண்டுள்ளார் என ; அத்துடன்

(ஆ) உரித்துப் பதிவுச் சட்டத்தின் நோக்கத்திற்காக, நிலவுரித்துசார் நில அளவைகளைக் கொண்டு

நடாத்துவதற்கு அத்தகைய நில அளவையாளருக்குள்ள தகுதி தொடர்பில், மதிப்பீட்டு முறை ஒன்றின் மூலம்.

திருப்திப்பட்டதன் மேல், அத்தகைய நில அளவையாளருக்கு நிலவுரித்துசார் நில அளவைகளைக் கொண்டு நடாத்துவதற்கு அவருக்கு அதிகாரம் அளிக்கின்ற மதிப்புக் கணிப்பீட்டுச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) மதிப்புக் கணிப்பீட்டுச் சான்றிதழொன்று வழங்கப் படுவதற்கு விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டிய விதம், முறை அத்துடன் அத்தகைய சான்றிதழ் வழங்குவதற்கு நில அளவையாளர் தலைமை அதிபதியினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் என்பன விதந்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் வரைபடங் களினதும் நிலப் படங்களினதும் பிரதிகளை வைப்பிலிடுதல் வேண்டும்.

**12.** (1) பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் எவரினாலும் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட மூல வரைபடங்களின் அல்லது நிலப்படங்களின் குறித்துரைக்கப்பட்ட வகுதிகளின் பிரதிகளும் தகவல் தளம் ஒன்றைத் தாபிக்கும் நோக்கத்திற்காக அவை அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முப்பது (30) நாட்களுக்குள் நில அளவையாளர் தலைமை அதிபதியிடம் அல்லது அத்தகைய நோக்கத்திற்காக அவரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரிடம் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வைப்பிலிடப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வரைபடங்களின் அல்லது நிலப்படங் களின் குறித்துரைக்கப்பட்ட வகுதிகளும் அத்தகைய வரைபடங் கள் அல்லது நிலப்படங்கள் வைப்பிலிடப்படவேண்டிய முறையும் விதித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

(3) உரித்துப் பதிவுச் சட்டத்தின்கீழ் நிலவுரித்துசார் வரைபடமொன்றை தயாரிக்கும் நோக்கத்திற்குத் தேவைப்படும் வரைபடமொன்றை அல்லது நிலப்படமொன்றை பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் ஒருவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நில அளவையாளர் தலைமை அதிபதியிடம் வைப்பிலிடுகின்றவிடத்து அத்தகைய நில அளவையாளர், 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் தமது ஆக்கத் துக்கான பாதுகாப்புக்கு உரித்துடையவராதலாகாது.

**13.** வரைபடம் அல்லது நிலப்படம் எதுவும் அல்லது அதன் பிரதி எதுவும் அல்லது வரைபடமொன்றின் அல்லது நிலப்படமொன்றின் சுவட்டு வரைவு ஏதுவும், அத்தகைய வரைபடம் அல்லது நிலப்படம் – குடியியல் வழக்கு நடவடிக்கையில் வரைபடம் அல்லது நிலப்படம் சான்றாக எடுத்துக் கொள்ளப் படுதல்.

(அ) நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அல்லது அவரின் சார்பில் அவரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட பதிவு பெற்ற நில அளவையாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்டு, நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அல்லது அந்நோக்கத்திற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பதிவு பெற்ற நில அளவையாளர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருந்தாலொழிய ; அல்லது

(ஆ) அத்துடன் பதிவுசெய்யப்பட்ட அனுமதி பெற்ற நில அளவையாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்டு, அத்தாட்சிப்படுத்தப்பட்டிருந்தாலொழிய,

இலங்கையிலுள்ள எந்நீதிமன்றத்திலும் சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுதலாகாது.

**14.** நில அளவையாளர் தலைமை அதிபதியினால் கொண்டு நடாத்தப்பட இருக்கும் நில அளவையொன்றின் நோக்கங்களுக்காக அவசியமானதென அவருக்குத் தோன்றும்போதெல்லாம்— நில அளவையாளர் தலைமை அதிபதி முதலியவர்கள் உறுதியைச் சமர்ப்பிக்குமாறு கோரலாம்.

(அ) ஏதேனும் நிலத்தின் அல்லது வளவுகளின் சொந்தக்காரரென உரிமை கோருகின்ற ஆளை அல்லது அவரது முகவரை, அத்தகைய நிலத்திற்கு அல்லது வளவுகளுக்கு, எந்த உறுதி மீது, ஆவணத்தின் மீது அல்லது வேறு சாதனத்தின் மீது அவர் உரித்துக் கோருகின்றாரோ, அந்த உறுதி, ஆவணம் அல்லது சாதனம் ஒவ்வொன்றையும் சமர்ப்பிக்குமாறு ;

(ஆ) அத்தகைய நிலத்தின் அல்லது வளவுகளின் இருப்பாட்சியாளரை, அவர் எந்த அதிகாரத்தின் மேல் தமது இருப்பாட்சியை அத்திவாரமாகக் கொண்டிருக்கிறார் என்பது பற்றியும் அத்துடன் அத்தகைய நிலத்தின் மற்றும் வளவுகளின் சொந்தக்காரரின் இருப்பிடங்கள் பற்றியும் தகவல்

சமர்ப்பிக்குமாறு, எழுத்தில் கோருவது, நில அளவை யாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அதற்கென அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட நிலஅளவையாளருக்கு சட்டமுறையான தாதல் வேண்டும். அத்துடன் விடயத்திற்கேற்றவாறு அத்தகைய கோரிக்கை விடுக்கப்பட்ட பத்து நாட்களுக்குள்—

(i) சொல்லப்பட்ட நிலத்துக்கான அல்லது வளவுகளுக்கான தமது உரிமைக் கோரிக்கையை அவர் எந்த உறுதியின், ஆவணத்தின் அல்லது வேறு சாதனத்தின் மேல் தாபிக்கின்றாரோ அந்த உறுதியை, ஆவணத்தை அல்லது வேறு சாதனத்தை சமர்ப்பிப்பதற்கு காரணமில்லாமல் அவர் மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து ;

(ii) அத்தகைய உறுதி, ஆவணம் அல்லது வேறு சாதனம் அவரின் உடைமையில் இல்லாத காரணத்தால், அத்தகைய உறுதியை, ஆவணத்தை அல்லது சாதனத்தை சமர்பிப்பிதற்கு இயலாமல் இருக்கின்றவிடத்து அத்துடன் அத்தகைய உறுதி, ஆவணம் அல்லது வேறு சாதனம் எவ்வாளின் உடைமையில் இருக்கின்றதோ அவ்வாளைப் பற்றி, காரணமில்லாமல், அறிவிப்பதற்கு மறுக்கின்றவிடத்து அல்லது தகவல் தருவதற்கு மறுக்கின்ற விடத்து,

அத்தகைய சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமெனபதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

உறுதி ஆவணம் அல்லது வேறு சாதனத்தை சமர்ப்பிக்குமாறு விடுக்கப்படும்

**15.** பதின்னாலாம் பிரிவின் கீழ் கோரப்படும் உறுதி, ஆவணம் அல்லது சாதனம், அத்தகைய உறுதி ஆவணம் அல்லது சாதனம் எந்த வளவுகள் தொடர்பானதோ அந்த வளவிலேயே அல்லது அதைக் கோருகின்ற ஆள் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு இடத்தில்

சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் 14 ஆம் பிரிவின் கீழ் அதைச் சமர்ப்பிக்குமாறு கோருவதற்கான தத்துவமானது, நில அளவையொன்றைச் செய்யும் நோக்கங்களுக்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய உறுதியை, ஆவணத்தை அல்லது சாதனத்தை அத்தகையவாறு பரிசோதனை செய்வதற்கான தத்துவத்தையும் உள்ளடக்குகின்றதெனக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் உறுதியை, ஆவணத்தை அல்லது சாதனத்தை அத்தகையவாறு பரிசோதனை செய்வதற்கு காரணமெதுவும் இல்லாமல் 14ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆளெவருக்கும் மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

கோரிக்கை அதைப் பரிசோதனை செய்வதற்கான தத்துவங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

16. (1) நில அளவையாளர் தலைமை அதிபதி அல்லது அதற்கென நில அளவையாளர் தலைமை அதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட நில அளவையாளர், எவரும், இருப்பாட்சியாளருக்கு நியாயமான அறிவித்தல் கொடுத்த பின்னர், எந்நிலத்திற்குள்ளும் அல்லது எவ்வளவுக்குள்ளும் புகுந்து அதன் மீதான நிலஅளவையொன்றைச் செய்வதற்கு, அத்தகைய நில அளவையாளர் தலைமை அதிபதியை அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளரை இயலச் செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பரிசோதனையை, நில அளவையை அல்லது நில அளவைக்குறி நிறுவுதலைச் செய்யலாம்.

நில அளவையாளர் தலைமை அதிபதி நிலத்திற்குள் புகுந்து அளவை செய்யலாம்.

(2) நிலத்துக்குள் அல்லது வளவுக்குள் புகுவதற்கு ஆகக் குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னர் நில அளவை செய்யப்பட வேண்டிய நிலத்துக்குள் அல்லது வளவுகளுக்குள் அல்லது நிலத்துக்கு அல்லது வளவுகளுக்கு மிக அண்மித்ததான துலாம்பரமான ஏதேனும் இடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படும் எழுத்திலான அறிவித்தலொன்று, (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக நியாயமான அறிவித்தலெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அவ்வாறு உட்புகுந்த பின்னர் நில அளவை ஒன்று செய்தலும், எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய நிலத்தின் அல்லது வளவுகளின் சொந்தக்காரரிடமிருந்து அல்லது இருப்பாட்சியாளரிடமிருந்து அதற்கான உரித்தை

அல்லது எவையேனும் சட்டரீதியான அக்கறைகளைப் பாதிக்கின்ற ஏதேனும் உறுதியை, ஆவணத்தை, சாதனத்தை அல்லது வரைபடத்தைச் சமர்ப்பிக்குமாறு கோருதலும் நில அளவையாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அதற்கென நிலஅளவையாளர் தலைமை அதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட நிலஅளவையாளருக்கும் அச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின்கீழ் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், அத்தகைய கோரிக்கை கிடைக்கப்பெற்ற பத்து நாட்களுக்குள் அத்தகைய உறுதியை, ஆவணத்தை, சாதனத்தை அல்லது வரைபடத்தை விடயத்திற்கேற்றவாறு நில அளவையாளர் தலைமை அதிபதியிடம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு நிலஅளவையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) அத்தகைய உறுதி, வேறு ஆவணம், சாதனம் அல்லது வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டதன்மேல் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய அத்தகைய உறுதியை, ஆவணத்தை, சாதனத்தை அல்லது வரைபடத்தைப் பரிசோதனை செய்து அவற்றின் மீதான குறிப்புக்களையும், அவற்றின் பிரித்திடுகைகளையும் பிரதிகளையும் எடுப்பது, அத்தகைய நில அளவையாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அத்தகைய நிலஅளவையாளருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

நில அளவையாளர் தலைமை அதிபதி அல்லது பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர் முதலியோரால் புரியப்படும் அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கான தண்டம்.

17. நில அளவையாளர் தலைமை அதிபதி அல்லது அவரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளரும் இச்சட்டத்தினால் அவரின்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் கடமையைப் புரிகின்றதென்ற அல்லது ஏதேனும் அதிகாரத்தைப் பிரயோகிக்கின்றதென்ற பாசாங்கின்கீழ் தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தால் அல்லது அவசியமற்ற வன்முறையைப் பயன்படுத்தினால் அல்லது வேண்டுமென்றே ஊறெதனையும் விளைவித்தால் அல்லது வேண்டத்தகாத அல்லது விழலான தொல்லையைக் கொடுத்தால், அத்தகைய நிலஅளவையாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய நிலஅளவையாளர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

நில அளவை களுக்கு முட்டுக்கட்டை போடுதல்.

**18.** ஏதேனும் நில அளவை செய்தல் அல்லது ஏதேனும் எல்லையை அல்லது நில அளவைக் கோடுகளைக் கண்டறிதல் அல்லது குறியிடுதல் அல்லது ஏதேனும் நில அளவைக் குறியை இடுதல், வைத்தல், மீள இடுதல், பழுதுபார்த்தல் அல்லது நாட்டல் தொடர்பில் தமது கடமைகளைப் புரிகையில் நில அளவையாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவருக்கும் அல்லது பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் ஒருவருக்கு அல்லது அத்தகைய நில அளவையாளர் தலைமையதிக்கு அல்லது அத்தகைய நிலஅளவையாளருக்கு உதவி புரிகின்ற ஆளெருவருக்கும் வேண்டுமென்றே முட்டுக்கட்டை போடுகின்ற அல்லது தடங்கல் செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

நில அளவைக் குறிகள் மீது குறுக்கீடு செய்தல்.

**19.** (1) நில அளவைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது எல்லைகளை வரையறை செய்வதற்கு அல்லது இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது அவற்றின் நோக்கங்களுக்காக கொண்டு நடாத்தப்பட்ட ஏதேனும் நில அளவையின் நோக்கங்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்ற அல்லது நாட்டப்பட்டிருக்கின்ற ஏதேனும் நில அளவைக் குறியின் நிலையை அல்லது அதன்மீதுள்ள குறியீடுகளைத் தெரிந்து கொண்டே அல்லது வேண்டுமென்று அகற்றுகின்ற, அழிக்கின்ற அல்லது மாற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய தவறு தொடர்பில் அவர் ஆளாகக்கூடியவாறான குற்றப்பணத்தோடு சேர்த்து நில அளவைக்கான செலவுகள் மற்றும் ஏதேனும் நில அளவைக் குறியை பழுதுபார்த்தல், மீளவைத்தல் அல்லது அதன் சரியான இடத்தில் மீள இடுதல் அல்லது எத்தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாரோ அத்தவறின் விடயப் பொருளாக இருக்கும் ஏதேனும் நில அளவைக் குறி

மீதான குறியீடுகளை மீளஇடுதல் என்பன தொடர்பிலான செலவு உட்பட்டதான செலவைக் கொடுப்பனவு செய்வதற்கும் ஆளாதல் வேண்டும். இச்செலவுகள் நில அளவையாளர் தலைமை அதிபதியினால் மதிப்பீடு செய்யப்பட்டு அவை குற்றப்பணம் ஒன்று என்றாற்போன்று அறவிடப்படற்பாலன வையாகச் செய்யப்படுதல் வேண்டும்.

பொய்யான நில அளவைக் குறிகள்.

**20.** இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் நில அளவை நோக்கங் களுக்காக ஏதேனும் இடத்தில் வைக்கப்பட்ட நில அளவைக் குறியொன்று அல்லது நிலக் குறியொன்று என ஆளெவரையும் நம்பச் செய்வதற்கு முன்னப்பட்டதும் சரியாக வைக்கப்பட்ட நில அளவைக் குறியொன்றாக இல்லாததுமான ஏதேனும் முன்னைய குறியை, நிலக் குறியை அல்லது வேறு குறியை ஏதேனும் நிலம் தொடர்பில் ஒரு நிலையில் வைக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்ற வாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்ன ரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக் கப்பட்டதன்மேல், இருபதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

நில அளவையாளர் தலைமை அதிபதியினால் ஒப்பமிடப்பட்ட குறித்த நில வரைபடங் களுக்கான எண்ணிப்பு.

**21.** இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டதும் நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அல்லது அவர் சார்பில் செயலாற்றுகின்ற அலுவலரினால் ஒப்பமிடப்பட்ட தெனக் கொள்ளப்படுகின்றதும் ஏதேனும் துடர்ச்சியில் சான்றாக முன்வைக்கப்படுபவருமான ஏதேனும் நிலவுரித்து சார் நிலப்படம், வரைபடம் அல்லது வேறு ஏதேனும் வரைபடம் அல்லது நிலப்படம், சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அது, அதன்கண் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கு முதற்றோற்ற எண்ணிப்பாக எடுத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும். அத்துடன் அது உண்மையில் நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அல்லது அவர் சார்பில் செயலாற்றுகின்ற அலுவலர் ஒருவரினால் ஒப்படைக்கப்பட்டதென அல்லது அது அவரின் அதிகாரத்து டன் தயாரிக்கப்பட்டதென அல்லது அது செம்மையானதென எண்ணிப்பது, அதற்கு முரணான சான்று முதலில் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய அவசியமானதாதலாகாது.

22. எழுத்திலான ஏதேனும் சட்டத்திற்கு இணங்கித் தயாரிக்கப்பட்டதும், அத்தகைய வரைபடம் ஒன்றின் அல்லது நிலப்படம் ஒன்றின் உண்மைப் பிரதியொன்றெனக் கொள்ளப் படுவதும், நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அல்லது அவர் சார்பில் செயலாற்றுகின்ற எவரேனும் அலுவலரினால் ஒப்பமிடப் பட்டதாகக் கொள்ளப்படுகின்றது மான ஏதேனும் நிலவுரித்துசார் நிலப்படம், வரைபடம் அல்லது வேறு ஏதேனும் வரைபடம் அல்லது நிலப்படம், எல்லா வழக்குகளிலும் அத்துடன் எல்லா நோக்கங்களுக்காகவும் மூலப்பிரதிக்குப் பதிலாக சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பால தால் வேண்டும். அத்துடன் (மூலப்பிரதி பெறப்பட முடியாது என்பதற்கான எண்பிப்பு இன்றி) அதன்கண் காட்டப்பட்டுள்ள நிகழ்வுகளின் உண்மைத் தன்மைக்கு மூலப்பிரதியிலுள்ள நிகழ்வுகளைப் போன்றவாறே முழுமையான முதற்றோற்றச் சான்றாக எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய பிரதியானது நிலஅளவையாளர் தலைமை அதிபதியினால் அல்லது அவரின் சார்பில் செயலாற்றுகின்ற அலுவலரினால் ஒப்பமிடப்பட்டதென அல்லது உண்மைப் படுத்தப்பட்டதென அல்லது அது உண்மையான பிரதியொன் றென அல்லது அதன்கண் தரப்பட்டுள்ள நிகழ்வுகள் செம்மையானவையென எண்பிப்பது, அதற்கு முரணாக சான்று முதலில் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, அவசியமான தாதலாகாது.

நில அளவையாளர் தலைமை அதிபதியினால் உண்மைப் படுத்தப்பட்டன வெனக் கொள்ளப்படும் பிரதிகள், மூலப் பிரதிகளுக்குப் பதிலாக சான்றாக ஏற்றுக் கொள்ளப் படற்பாலன வாதல்.

23. (1) உரித்துப் பதிவுச் சட்டத்தின் நோக்கத்திற்காக, நிலவுரித்துசார் நிலப்படமொன்று அல்லது ஏதேனும் வரைபடம் தயாரிப்பதற்காக நில அளவை செய்யப்பட்ட எல்லைகள், நிரந்தர அம்சங்களாக வேறு வகையில் வரையறுக்கப்பட்டி ருக்காதவிடத்து எல்லைக் குறிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும் குறிகளினால் வரையறுக்கப்படுதல் வேண்டும். இவ்வெல்லைக் குறிகள் அரச நிலக் குறிகள் கட்டளைச் சட்டத்தின் கருத்தெல் லைக்குள் அரச நிலக் குறிகள் எனக் கருதப்படுதல் வேண் டும்.

நிலவுரித்துசார் நிலப்படங்களை அல்லது வரை படங்களைத் தயாரித்தலும் நிலக்குறிகளை இடுதலும்.

(2) ஏதேனும் நிலத்தின் அல்லது வளவுகளின் இருப்பாட்சியாளர், உரிமைக் கோரிக்கையாளர் அல்லது சொந்தக்காரர் ஒவ்வொருவரும் அத்தகைய நிலத்தின் எல்லையின் மீது இடப்பட்டிருக்கும் எவையேனும் நிலக்குறிகளையும் அத்துடன் அத்தகைய நிலத்திற்குள் அல்லது

வளவுகளுக்குள் இடப்பட்டிருக்கும் ஏதேனும் எல்லைக் குறியையும் குழப்பாமல் அவற்றைப் பேணுதல் வேண்டும் ; ஆயின் எவ்வாறாயினும் அரசுக்குச் சொந்தமான ஒதுக்கு நிலம் ஒன்றின் ஒதுக்கிடம் ஒன்றில் அல்லது அரச நிலத்தின் அல்லது வளவுகளின் எல்லை வழியே இடப்பட்டிருக்கும் எவையேனும் நிலக்குறிகளின் விடயத்தில், அத்தகைய ஒதுக்கு நிலத்தை, ஒதுக்கு இடத்தை அல்லது அரச நிலத்தை அடுத்துள்ள நிலத்தின் உரிமைக் கோரிக்கையாளர், இருப்பாட்சியாளர், குத்தகை எடுத்தவர் அல்லது சொந்தக்காரர், ஒவ்வொருவரும் அத்தகைய எல்லையில் இடப்பட்டிருக்கும் எவையேனும் நிலக்குறிகளைக் குழப்பாமல், அவற்றைப் பேணுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**24.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் அல்லது எவ்விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அவ்விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், பின்வரும் எல்லா விடயங்கள் தொடர்பில் அல்லது பின்வரும் எவையேனும் விடயங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:—

(அ) இலங்கை முழுவதையும் அல்லது இலங்கையின் பாகத்தை மேவுகையிலான நிலவுரித்துசார் நிலப்படங்கள் தயாரிக்கப்பட்டும் பேணப்பட வேண்டிய விதமும் முறையும் ;

(ஆ) நில அளவைகள் கொண்டு நடாத்தப்பட வேண்டிய முறை அத்துடன் நில அளவை ஒன்று சம்பந்தமான நிலப்படங்கள், வரைபடங்கள், புத்தகங்கள், மற்றும் ஏனைய பதிவேடுகள் தயாரிக்கப்பட வேண்டிய முறையும், வடிவமும் அத்துடன் அத்தகைய நிலப்படங்களில் வரைபடங்களில், புத்தகங்களில் மற்றும் பதிவேடுகளில் உட்புகுத்தப்பட வேண்டிய விபரங்கள் ;

(இ) நில அளவைகளில் எய்தப்படவேண்டிய செம்மைத் தன்மையையும் அனுமதிக்கப்படக்கூடிய வழுவின் எல்லையையும் வரையறுத்தல் ;

(ஈ) நில அளவைகளில் செம்மைத் தன்மையை பரிசோதனை செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் அத்துடன் கண்டுபிடிக்கக்கூடிய எவையேனும் செம்மையற்ற தன்மைகளைத் திருத்துவதற்கு ஏற்பாடு செய்தலும்.

(3) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், அது, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து ஆறு மாத காலப் பகுதியொன்றுக்குள் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் வழங்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் எத்தேதியன்று இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

நீக்கம் செய்தலும் பேணல்களும்.

25. (1) (அ) (458 அத்தியாயமான) நில அளவைகள் கட்டளைச் சட்டம், அத்துடன்

(ஆ) (108 அத்தியாயமான) நில அளவையாளர்கள் கட்டளைச் சட்டம் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

(2) நில அளவைகள் கட்டளைச் சட்டம் நீக்கப்பட்டது எப்படி இருப்பினும் –

(அ) அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் ஒப்பமிடப்பட்ட எல்லா வரைபடங்களும், நிலப்படங்களும், அத்தகைய வரைபடங்களும் நிலப்படங்களும் இச்சட்டத்தின்கீழ் ஒப்பமிடப்பட்டன என்றாற் போன்று வலிதுடையன வாகவும் பயனுடையதாகவும் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) நில அளவையாளர்கள் கட்டளைச் சட்டம் –

(i) அத்தகைய கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டனவும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னர் வலுவில் இருப்பனவுமான எல்லா ஒழுங்குவிதிகளும், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத அளவுக்கு இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகளினால் மாற்றப்படும் வரை, திருத்தப்படும் வரை அல்லது இல்லாதொழிக்கப்படும் வரை, தொடர்ந்து வலுவில் இருத்தல் வேண்டும் ;

(ii) அத்தகைய கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க எவரேனும் உரிமம் பெற்ற நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட எல்லா வரைபடங்களும் நிலப்படங்களும், அத்தகைய வரைபடங்களும் நிலப்படங்களும் இச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டன என்றாற்போன்று வலிதுடையனவாகவும் பயனுடையனவாகவும் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(iii) அத்தகைய அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் படவரைஞர் ஒருவராகப் பணிபுரிவதற்கு எவரேனும் ஆளுக்கு அதிகாரம் அளிக்கின்றனவும் நில அளவையாளர் தலைமை அதிபதியானால் வழங்கப்பட்டனவுமான எல்லாச் சான்றிதழ்களும் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(iv) அத்தகைய கட்டளைச் சட்டத்தின்கீழ் நில அளவையாளர் தலைமை அதிபதியினால் நடாத்தப்பட்ட எல்லாப் பரீட்சைகளும், இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது அப்பரீட்சார்த்திக்கு, அவசியமான தகைமைகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் ஒன்று வழங்கும் ஒரே நோக்கத்திற்காக, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு நில அளவையாளர் தலைமை அதிபதியினால் தொடர்ந்தும் நடாத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### நிலஅளவை சபை

நில அளவைப் பேரவையைத் தாபித்தல்.

**26.** (1) (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நில அளவைப் பேரவை என அழைக்கப்பட வேண்டிய பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கு இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினை ஒன்றும் இருத்தலும் வேண்டும். அது, அத்தகைய பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராகவும் வழக்குத் தொடுக்கவும்படலாம்.

சபையின் உறுப்பினர்கள்.

**27.** பேரவை, பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் –

(i) நில அளவையாளர் தலைமை அதிபதி ; இவர் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(ii) நில அளவையாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவரும் பிரதி நில அளவையாளர் தலைமை அதிபதியின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையைக் கொண்டவருமான பதிவு பெற்ற நில அளவையாளர் ஒருவர், இவர் துணைத் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(iv) அத்தகைய கட்டளைச் சட்டத்தின்கீழ் நில அளவையாளர் தலைமை அதிபதியினால் நடாத்தப்பட்ட எல்லாப் பரீட்சைகளும், இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது அப்பரீட்சார்த்திக்கு, அவசியமான தகைமைகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் ஒன்று வழங்கும் ஒரே நோக்கத்திற்காக, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு நில அளவையாளர் தலைமை அதிபதியினால் தொடர்ந்தும் நடாத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### நிலஅளவை சபை

**26.** (1) (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நில அளவைப் பேரவை என அழைக்கப்பட வேண்டிய பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். *நில அளவைப் பேரவையைத் தாபித்தல்.*

(2) பேரவையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கு இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினை ஒன்றும் இருத்தலும் வேண்டும். அது, அத்தகைய பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராகவும் வழக்குத் தொடுக்கவும்படலாம்.

**27.** பேரவை, பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும். *சபையின் உறுப்பினர்கள்.*

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் –

(i) நில அளவையாளர் தலைமை அதிபதி ; இவர் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(ii) நில அளவையாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவரும் பிரதி நில அளவையாளர் தலைமை அதிபதியின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையைக் கொண்டவருமான பதிவு பெற்ற நில அளவையாளர் ஒருவர், இவர் துணைத் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(iii) 1969 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, நிலஅளவை மற்றும் நிலப்படம் வரைதல் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நில அளவை மற்றும் நிலப்படம் வரைதல் நிறுவகத்தின் பணிப்பாளர் ; அத்துடன்

(ஆ) பின்வரும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் –

(i) 1982 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க, நில அளவையாளர்கள் நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை நில அளவையாளர்கள் நிறுவகத்தால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவர்களும் நில அளவை செய்தலில் பரந்த அனுபவமும், சான்றுறுதியான ஆற்றல்களும் கொண்டவர்களுமான பதிவு பெற்ற மூன்று நில அளவையாளர்கள் ;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவரும் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தான கல்வி நிருவாகம், முகாமை அல்லது பொறியியல் துறையிலுள்ளவருமான கல்விமான்களுள் ஒரு கல்விமான்.

இவர்கள் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

உறுப்பினர் ஒருவராக இருப்பதிலிருந்து தகைமையிழப்பிக்கப்படுதல்.

**28.** ஆளொருவர் –

(அ) அவர் பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது உறுப்பினர் ஒருவராக வந்தால் ; அல்லது

(ஆ) அவர் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால் ; அல்லது

(இ) அவர் இலங்கையின் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவில் உள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனம் அற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(ஈ) அவர் இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற் தண்டனை ஒன்றை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால் ; அல்லது

(உ) அவர் பேரவையின் உறுப்பினரொருவராக அவரின் பணிகளை நிறைவேற்றுகையில் அவற்றுக்குப் பங்கம் ஏற்படுத்தக்கூடியவாறாக ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால் ;

(ஊ) அவர் விருப்புப்பெறா வங்குரோத்துக்காரர் ஒருவராக இருந்தால் ; அல்லது

(எ) அவர் பேரவையின் அனுமதியின்றி, பேரவையின் மூன்று அடுத்தடுத்த கூட்டங்களுக்குச் சமுகமளிக்காதிருந்தால் ; அத்துடன்

(ஏ) அவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டால்,

பேரவையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்து இருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

உறுப்பினர்கள் அகற்றப்படுதலும் அவர்கள் பதவி விலகலும்.

**29.** (1) பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமூலம் தமது பதவியிலிருந்து விலகலாம். அத்தகைய பதவி விலகலானது, அது எத்தேதியன்று அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோ, அத்தேதியிலிருந்து பயனுடையதாதல் வேண்டும்.

(2) அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரைப் பெயர்குறித்து நியமிக்கின்ற அதிகாரியுடன் கலந்தாலோசித்த பின்னர் எழுத்தில் கூறப்பட்ட காரணங்களைக் காட்டி அத்தகைய உறுப்பினரை பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) பேரவையின் நியமிக்கப்பட்ட ஒருவர் இறக்கின்றவிடத்து, பதவியிலிருந்து விலகுகின்றவிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்றவிடத்து, அமைச்சர் 27 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரின் இடத்திற்கு இன்னோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர், அவர் எவ்வுறுப்பினரையடுத்து வருகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாத பாகத்திற்கு பதவி வகித்தல் வேண்டும்.

(5) பேரவையின் பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் எப்பதவியின் பயனைக்கொண்டு பேரவையின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்றாரோ, அப்பதவியை அவர் வகிக்கின்ற பதவி வகித்தல் வேண்டும்.

உறுப்பினரின் பதவிக்காலம்.

**30.** இருபத்தொன்பதாம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் ஊதியம் அல்லது படி.

**31.** பேரவையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அமைச்சரால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் பேரவையின் நிதியத்தில் இருந்து அத்தகைய ஊதியம் அல்லது படிகள் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

செயலாளர்.

**32.** (1) பேரவைக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். இவர் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) செயலாளர், பேரவையின் அலுவலர்களின் நாளாந்த நிருவாகத்திற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும். செயலாளர் பேரவையின் கூட்டங்களின் குறிப்புகள் பற்றிய பதிவேடு ஒன்றை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் அத்தகைய கூட்டங்களில் பேசுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும். ஆனால், அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு அவர் உரித்துடையவராதலாகாது.

பேரவையின் கூட்டங்கள்.

**33.** (1) தவிசாளர் அல்லது அவர் இல்லாதபோது துணைத் தவிசாளர் பேரவையின் கூட்டங்களுக்குத் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் அத்துடன் துணைத் தவிசாளர் ஆகிய இருவரும் இல்லாதபோது, சமுகமாயிருக்கும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) பேரவை அதன் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களில் கையாளப்படுவது தொடர்பிலான நடவடிக்கை முறையையும் ஒழுங்குபடுத்தலாம்.

(3) பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவு செய்யப் படுவதற்காக வைக்கப்படும் எல்லா வினாக்களும், சமுக மாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குமூலம் முடிவுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாக இருக்கும் விடயத்தில் தவிசாளருக்கு அல்லது பேரவையின் அக்கூட்டத்தில் தலைமைதாங்கும் உறுப்பினர்களுக்கு அவருடைய சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக செயல்கள் வறிதற்றதாத லாகாது.

**34.** பேரவையின் வெற்றிடம் ஒன்று அல்லது பேரவையின் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தின் ஏதேனும் குறைபாடு இருக்கின்ற காரணத்தால் மட்டும் பேரவையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கைகள் எதுவும் வறிதற்றதாக்கப் படுதலாகாது.

பேரவையின் இலச்சினை.

**35.** (1) பேரவையின் இலச்சினையானது பேரவையால் தீர்மானிக்கப்பட்டு அத்துடன் வடிவமைக்கப்படலாம் என்பதுடன் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(2) பேரவையின் இலச்சினையானது செயலாளரின் கட்டுக்கோப்பில் இருத்தல் வேண்டும்.

(3) பேரவையின் இலச்சினையானது, பேரவையின் அனுமதியுடனும் தவிசாளரினதும் உறுப்பினர் ஒருவரினதும் முன்னிலையிலும் தவிர சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. தவிசாளரும் உறுப்பினரும் அவர்கள் சமுகமளித்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடல் வேண்டும்.

(4) பேரவையானது எந்தச் சாதனங்களுக்கும் ஆவணங்களுக்கும் பேரவையின் இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கின்றதோ அச்சாதனங்களினதும் ஆவணங்களினதும் இடாப்பொன்றைப் பேணிவருதல் வேண்டும்.

பேரவையின் தத்துவங்களையும் பணிகளையும் கையளித்தல்.

**36.** (1) பேரவையானது பேரவையின் ஏதேனும் தத்துவங்களையும் பணிகளையும் தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பேரவையின் எவையேனும் தத்துவங்கள் அல்லது பணிகள் கையளிக்கப்பட்டிருக்கின்ற அத்தவிசாளர் பேரவையின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைய, அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

பேரவையின் பணிகளும் கடமைகளும்.

**37.** பேரவையின் பணிகளும் கடமைகளும் பின்வருவனவாதல் வேண்டும் —

(அ) நிலம் அளத்தலில் ஈடுபட்டுள்ள ஆட்கள் மத்தியில் நிலம் அளத்தல் மற்றும் தொழில்சார் ஒழுக்காறு என்பன தொடர்பில் தராதரங்களையும் நடைமுறைகளையும் பேணுதல் ;

(ஆ) பதிவுபெற்ற நில அளவையாளர்களாகப் பதிவுசெய்யப்படுவதற்காக நில அளவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறுதல் அத்துடன் அத்தகைய நில அளவையாளர்கள் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளை அல்லது அனுபவங்களை உடையவர் எனவும் அத்துடன் நிலம் அளத்தல் தொழிலைப் புரிவதற்கேற்ற ஆற்றலும் தேர்ச்சியும் உள்ளவர் எனவும் பேரவையானது திருப்திப்படுகின்றவிடத்து, அத்தகைய நில அளவையாளர்களைப் பதிவு செய்தல் ;

(இ) வருடாந்தத் தொழில்புரி உரிமைகளை வழங்குவதற்காகப் பதிவுபெற்ற நில அளவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறுதல் அத்துடன், அத்தகைய நில அளவையாளர்கள் நிலம் அளத்தல் தொழிலைப் புரிவதற்கேற்ற அறிவும் திறமையும்

உடையவர்கள் என்று பேரவையானது திருப்திப்படுகின்றவிடத்து அத்தகைய நில அளவையாளர்களுக்கு அத்தகைய உரிமங்களை வழங்குதல் ;

(ஈ) நிலம் அளத்தல் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்கள் மத்தியில் உயர்தொழில்சார் கல்வியின் உயர் தரங்களைப் பேணுதலை முன்னேற்றுதல் ;

(உ) நிலம் அளத்தல் தொழிலைப் புரிகின்ற ஆட்களினதும் வருடாந்த தொழில்புரி உரிமத்தைப் பெறுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஆட்களினது அறிவையும் திறமையையும் மேம்படுத்துவதன்மூலம் உயர்தொழில்சார் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னேற்றுதல் ;

(ஊ) நிலம் அளத்தலில் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளை ஏற்றங்கீகரித்தல், செயன்முறை அனுபவத் தேவைப்பாடுகளைத் தாபித்தல் அத்துடன் பதிவுபெற்ற நில அளவையாளர்களாகப் பதிவு செய்யப்படுவதற்காகவும் வருடாந்த தொழில்புரி உரிமங்களை வழங்குவதற்காகவும் பரீட்சார்த்திகளுக்கு தகைமையளிக்கும் பரீட்சைகளையும் தொழில்சார் நேர்முகப்பரீட்சைகளையும் நடாத்துதல்;

(எ) நிலம் அளத்தலில் ஈடுபட்டுள்ள ஆட்களின் கல்வி, பயிற்சி மற்றும் அவர்களை அங்கீகரித்தல் என்பன தொடர்பான ஒருமைப்பாட்டையும் இருவகையிலொத்த நன்மையையும் பாதுகாக்கும் நோக்கத்திற்காக வெளிநாடுகளிலுள்ள இயைபான அதிகாரசபைகளுடன் இவைக்கிணையான உடன்பாட்டொழுங்குகளைச் செய்துகொள்ளுதலும் நிர்வகித்தலும் ;

(ஏ) தேவைப்படுத்தப்பட்ட கல்வித்தராதரங்களைப் பேணுவதற்காக இலங்கையில் நிலம் அளத்தல் மற்றும் நிலம்சார் தகவல் என்பவற்றில் கல்வி மற்றும் பயிற்சியில் ஈடுபட்டுள்ள நிறுவகங்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல் ;

(ஐ) தொழில்சார் உயர் தராதரங்களைப் பேணுவதில் இலங்கையில் உள்ள வேறு இயைபான ஒழுங்கமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்.

பேரவையின் தத்துவங்கள்.

**38.** பேரவையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டாதாதல் வேண்டும். —

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுதல் வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடவு வைத்தல், விற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஆ) காசாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி கொடைகளையும் மானியங்களையும் அல்லது நன்கொடைகளையும் ஏற்றுக்கொள்ளல் அத்துடன் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பிரயோகித்தல் ;

(இ) பேரவையின் வேலையை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் ;

(ஈ) அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தல் ;

(உ) அதன் பணிகளைப் பயனுற நிறைவேற்றுவதற்காக குழுக்களை நியமித்தல் ;

(ஊ) சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றைத் தாபித்தல் அத்துடன் அதனது அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் நலன்புரி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(எ) பேரவையின் அலுவல்களை நிர்வகித்தல் தொடர்பில் வசதிகளை ஆக்குதல் ; அத்துடன்

(ஏ) பொதுவாக பேரவையின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதை வசதி செய்வதற்கு அவசியமாகின்றவாறான அதனுடைய எல்லா விடயங்களையும் செய்தல்.

நில அளவையாளர் சேவையுடன் பதிவுசெய்தல்.

**39.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அல்லது அதன்பின்னர் அதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளை உடையவர்களும் பேரவையுடன் தம்மைப் பதிவு செய்துகொண்டுள்ளவர்களும் அத்துடன் அப்போதைக்கு வரவில் இருக்கின்றதான பதிவுச் சான்றிதழ் ஒன்று வழங்கப் பட்டவர்களுமான ஆட்கள் தவிர்ந்த வேறு ஆள் எவரும் நிலம் அளத்தல் தொழிலில் ஈடுபடுதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கல்வித் தகைமைகளை உடையவரும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்ட ஆள் ஒருவரின் மேற்பார்வை யின்கீழ் வேலைசெய்பவருமான ஆள் ஒருவர், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட செய்முறைத் தகைமை களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக நிலம் அளத்தல் தொழிலில் ஈடுபடலாம், ஆனால் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவதற்கு தகவுடையவராக இருத்தலாகாது.

(3) நில அளவையாளர் ஒருவராகப் பதிவுசெய்யப் படுவதற்கான விண்ணப்பம் ஒன்று விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் விதந்து ரைக்கப்பட்ட கட்டணத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) பேரவையானது நிலம் அளத்தலில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடுவதற்கு உத்தேசித்துள்ள ஆள் ஒருவரினால் அதன் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றினைப் பெற்றதன்மேல் அத்துடன் நன்னடத்தை பற்றியும் விதந்து ரைக்கப்பட்ட கட்டணமும் செலுத்தப்பட்டமை பற்றியும் சான்று சமர்ப்பிக்கப்பட்டதன்மேல், அத்தகைய ஆள் நிலம் அளத்தலில் ஈடுபடுவதற்கான தகைமைகளையும் அனுபவத்தன்மையையும் தேர்ச்சிகளையும் கொண்டிருக்கின்றார் என்று பேரவையானது திருப்திப்படுத்துகின்றவிடத்து, அத்தகைய ஆளைப் பதிவு செய்யலாம்.

நில அளவையாளர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமம் ஒன்று வழங்கப்

**40.** (1) முப்பத்தொன்பதாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று நில அளவையாளர்கள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் அல்லது 6 ஆம் பிரிவின்கீழ் வருடாந்த உரிமம் ஒன்று

படுவதற்கு உரித்துடைய நில அளவையாளர்கள் பதிவுசெய்யப் பட்டிருப்பதாகக் கருதப்படுதல்.

வழங்கப்படுவதற்கு உரித்துடையவரான ஒவ்வொரு நில அளவையாளரும் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும் நில அளவையாளர் ஒவ்வொருவரும் வசதியானளவு விரைவாக பின்வரும் விபரங்களைப் பேரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் –

(அ) நில அளவையாளரின் பெயர் மற்றும் முகவரி ;

(ஆ) நில அளவையாளர் கட்டளைச் சட்டத்தின்கீழ் வருடாந்த உரிமம் ஒன்று வழங்கப்படுவதற்கு அவருக்கு உரித்தளிக்கும் கட்டளைக் கற்கள் அல்லது தகைமை.

(3) முப்பத்தொன்பதாம் பிரிவின் (3) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் பேரவையுடன் பதிவு செய்துகொண்டுள்ள அல்லது (1) ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்ற நில அளவையாளர் ஒவ்வொருவருக்கும் பதிவுச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அவர் இக்கட்டளைச் சட்டத்தில் பதிவுபெற்ற நில அளவையாளர் எனக் குறிப்பீடு செய்யப்படுதலும் வேண்டும்.

வருடாந்தத் தொழில்புரி உரிமம்.

**41.** (1) நிலம் அளத்தல் தொழிலைப்புரிவதற்கு விரும்புகின்ற அல்லது புரிய முயற்சி செய்கின்ற அல்லது புரிவதாக வெளிப்படுத்துகின்ற பதிவுபெற்ற நில அளவையாளர் ஒவ்வொருவரும் வருடாந்த தொழில்புரி உரிமத்தைப் பெறுவதற்காகப் பேரவைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் நில அளவைத் திணைக்களத்தில் நில அளவையாளர் தலைமை அதிபதியின் மேற்பார்வையின்கீழ் நிலம் அளத்தல் தொழில்புரியும் பதிவுபெற்ற நில அளவையாளர்கள் அரசாங்கத்தின் சார்பில் நிலம் அளத்தல் தொழில்புரியும் நோக்கத்திற்காக வருடாந்தத் தொழில்புரி உரிமம் ஒன்றைப் பெறவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

(2) பேரவையானது, விதந்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்ந்து பதிவுபெற்ற நில அளவையாளரால் அதன் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றைப் பெறுவதன்மேல் அந்நில அளவையின் விதந்துரைக்கப்பட்ட கற்கைநெறிகளையும் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியையும் மேற்கொண்டுள்ளார் என்பதுடன் நிலம் அளத்தல் தொழிலைப் புரிவதற்கான அறிவையும் தேர்ச்சியையும் பெற்றுள்ளார் என்றும் பேரவையானது திருப்திப்படுகின்றவிடத்து, அத்தகைய நில அளவையாளருக்கு வருடாந்தத் தொழில்புரி உரிமம் ஒன்றை வழங்கலாம்.

(3) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் இச்சட்டம் தொடங்கும் திகதி மற்றும் நிலம் அளத்தல் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற பதிவுபெற்ற ஒவ்வொரு நில அளவையாளரும் அத்தகைய திகதியிலிருந்து ஆறு மாதகாலத்திற்கு நிலம் அளத்தல் தொழிலைத் தொடர்ந்தும் புரியலாம் ; ஆனால் அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக இச்சட்டத்தின்கீழ் வருடாந்தத் தொழில்புரியும் உரிமத்திற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வருடாந்தத் தொழில்புரியும் உரிமம் ஒன்று வழங்கப்பட்ட பதிவுபெற்ற ஒவ்வொரு நில அளவையாளரும் "பதிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர்" ஒருவர் என இச்சட்டத்தில் குறிப்பீடுசெய்யப் படுவார்.

நில அளவையாளர்களின் இடாப்பு.

**42.** (1) பேரவையானது –

(அ) பதிவுபெற்ற எல்லா நில அளவையாளர்கள் ; அத்துடன்

(ஆ) பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற எல்லா நில அளவையாளர்களும்

பற்றிய இடாப்பொன்றை பேணுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் மேன்படு இடாப்புகள், பதிவுபெற்ற நில அளவையாளர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர்கள் எல்லோரதும் பெயர்கள், தகைமைகள், முகவரிகள் அத்துடன் எத்தேதியில் பதிவு செய்யப்பட்டார்களோ அல்லது அத்தகைய உரிமங்கள்

வழங்கப்பட்டார்களோ அந்தத் தேதிகள் மற்றும் இச்சட்டத்தின் கீழ் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய வேறு விபரங்கள் என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இடாப்புகள் பொதுமக்கள் பார்வையிடுவதற்காகத் திறந்துவைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விதந்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன்மேல் எவரேனும் ஆள் அதனைப் பார்வையிடலாம்.

(4) பேரவையானது, விதந்துரைக்கப்பட்ட கட்டணம் ஒன்று செலுத்தப்படுவதன்மேல் ஏதேனும் இடாப்பில் உள்ள ஏதேனும் பதிவேட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை அத்தகைய பிரதியைக் கோரும் ஆளுக்கு வழங்குதல்.

இடாப்பின் பிரதி வெளியிடப்படுதல் வேண்டும்.

**43.** (1) பேரவையானது, பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற எல்லா நில அளவையாளர்களினதும் பெயர்களைக்கொண்ட நிலம் ஒன்றை, ஒவ்வொரு வருடத்திலும் மாச்சு 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளியிடுதல் வேண்டும் ; அத்துடன், வருடாந்தத் தொழில் உரிமம் ஒன்றினை நீக்கம் செய்த ஒரு மாதத்திற்குள் அதற்குரிய அறிவித்தலைக் கொடுக்கும் அறிவிப்பு ஒன்று கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

(2) பேரவையானது, பதிவுபெற்ற நில அளவையாளர்கள் இடாப்பை அல்லது அதன் பாகத்தை அவ்வாறு செய்வது அவசியமானதெனக் கருதுகின்றவிடத்து, வெளியிடுவித்தல் வேண்டும்.

(3) பேரவையின் தவிசாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற அத்தகைய ஏதேனும் இடாப்பில் உள்ள ஏதேனும் பதிவேட்டில் பிரதி ஒன்று அதன்கண் கூறப்பட்ட அவ்வாள் விடயத்திற்கேற்றவாறாக –

(அ) பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவர் ;

(ஆ) விடயத்துக்கு ஏற்றவாறு வருடாந்தத் தொழில்புரி உரிமம் ஒன்றைக் கொண்டிருக்கின்றார் அல்லது கொண்டிருக்கவில்லை ;

(இ) அதன்கண் கூறப்பட்ட தகைமையை உடையவர் ;

(ஈ) விடயத்துக்கு ஏற்றவாறு அவருடைய பதிவு நீக்கப்பட்டுள்ளது, அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளது ; அல்லது

(உ) அவருடைய வருடாந்தத் தொழில்புரி உரிமம் நீக்கப்பட்டுள்ளது அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளது,

என்பதற்கு, எத்தன்மைத்தான எல்லா வழக்கு நடவடிக்கைகளிலும் விடயத்துக்கு ஏற்றவாறு முதற்றோற்ற அளவிலான சான்றாகவிருத்தல் வேண்டும்.

பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவரின் தத்துவங்கள்.

**44.** பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவர் –

(அ) நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்டபோது அரசாங்கத்தின் சேவையில் நிலம் அளத்தல் தொழிலில் ஈடுபடலாம் ; அல்லது

(ஆ) வருடாந்தத் தொழில்புரி உரிமம் ஒன்றை வைத்திருந்தால் கட்டணத்திற்காக அல்லது சன்மானத்திற்காக நிலம் அளத்தல் தொழிலில் ஈடுபடலாம்.

உயர்தொழில் சார் பிறழ்நடத்தை.

**45.** (1) இச்சட்டத்தின் இந்தப் பாகத்தின் நோக்கங்களுக்கான பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவர் –

(அ) ஏதேனும் நில அளவையைக் கொண்டுநடாத்துவதில் கவனயீனமாக அல்லது தகுதிவாய்ந்தவரல்லாத விதமாக இருந்துள்ளார் என ;

(ஆ) நிலம் அளத்தல் தொழிலைப் புரிதல் சம்பந்தமாக எவையேனும் வழிகாட்டுவிதிகளுக்கு அல்லது பணிப்புகளுக்கு அல்லது விதந்துரைக்கப்பட்டவாறாக நில அளவை வரைபடங்களையும் நிலவுரித்துசார் நிலப்படங்களையும் தயாரித்தல் மற்றும் பேணுதல் சம்பந்தமான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளார் என ;

(இ) (i) அந்நில அளவையாளர் அரசாங்க சேவையில் உள்ள அலுவலர் ஒருவராக இருந்துகொண்டு முறையான வளத்தை அல்லது எச்சரிக்கையைப் பிரயோகிக்காமல் நில அளவையைக் கொண்டு

நடாத்தியிருக்கின்றவிடத்து, அல்லது வரைபடத்தை, அல்லது நிலப்படத்தை அத்தாட்சிப்படுத்தியிருக்கின்றவிடத்து ;

(ii) அத்தகைய நில அளவையாளர் பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளர் ஒருவராக இருந்து கொண்டு —

(அ) முறையான கவனத்தை அல்லது எச்சரிக்கையைப் பிரயோகிக்காமல் அத்தகைய நில அளவையைக் கொண்டுநடாத்தியிருக்கின்றவிடத்து அல்லது அத்தகைய வரைபடத்தை அல்லது நிலப்படத்தை அத்தாட்சிப்படுத்தியிருக்கின்றவிடத்து ;

(ஆ) அத்தகைய நில அளவையை தாமே நேரில் கொண்டுநடாத்தாமல் வேறொரு பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளரைக் கொண்டு செய்வித்துவிட்டு அத்துடன் அத்தகைய வேறு நில அளவையாளரின் வெளிக்கள வேலையினதும் அலுவலக வேலைகளினதும் செம்மைபற்றி உறுதிப்படுத்துவதற்குப் போதிய வழிவகைகளை எடுக்க மேலும் இருக்கின்றவிடத்து ;

(இ) அத்தகைய நில அளவையாளர் தாமே நேரில் கொண்டுநடாத்தாமல், பதிவு செய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளர் ஒருவர் அல்லது வேறு ஆள் ஒருவரைக் கொண்டு செய்வித்திருக்கின்றவிடத்து ;

(ஈ) அத்தகைய நில அளவை நிலப்படம் அல்லது வரைபடம் குறைபாடு உள்ளதாக இருக்கின்றது எனத் தெரிந்து கொண்டு அதன் செம்மை பற்றி அத்தாட்சிப்படுத்தியிருக்கின்றவிடத்து, ஏதேனும் நில அளவையின் அல்லது நில அளவை ஒன்று தொடர்பிலான ஏதேனும் வரைபடத்தின் அல்லது நிலப்படத்தினை செம்மை பற்றி அத்தாட்சிப்படுத்தியுள்ளார் என ;

(ஈ) வெளிக்கள சேவையில் உண்மையாக அவதானித்ததிலிருந்து அல்லது அளவீட்டிலிருந்து பெறப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுவதை, உண்மையாக

அவ்வாறு பெற்றிருக்காமல் ஏதேனும் வெளிக்களப் புத்தகத்தில் அல்லது வேறு பதிவேட்டில் ஏதேனும் பதிவொன்றைச் செய்துள்ளார் என ;

(உ) ஏதேனும் முக்கியமான விவரத்தில் தகவல் பிழையாக இருக்கின்றது என்று தெரிந்து கொண்டே ஏதேனும் நில அளவை, நில அளவைக் குறி அல்லது எல்லை தொடர்பில் ஏதேனும் பிழையான தகவலை நில அளவையாளர் தலைமை அதிபதிக்கு அல்லது வேறு எவரேனும் பதிவுபெற்ற நில அளவையாளருக்கு வழங்கியுள்ளார் என;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் கடமை அல்லது பேரவையினால் எந்த நிபந்தனைக்கமைய நில அளவைத் தொழிலைப் புரிவதற்கு அனுமதிக்கப் பட்டவரோ அந்த நிபந்தனையை நியாயமான காரணமின்றி நிறைவேற்றத் தவறியுள்ளார் என,

ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில் அல்லது மேன்முறையீட்டில் காணப்பட்டால் அவர் உயர்தொழில்சார் பிறழ்நடத்தைக்குக் குற்றவாளியாக இருத்தல் வேண்டும்.

(2) எவரேனும் பதிவுபெற்ற நில அளவையாளர் உயர்தொழில்சார் பிறழ்நடத்தைக் குற்றவாளியானவரா இல்லையா எனத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக, ஏதேனும் நில அளவை வரைபடம் அல்லது நிலப்படம் நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அல்லது அவர் சார்பில் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றது என்ற நிகழ்வு இயைபானதாக இருத்தலாகாது.

பதிவுபெற்ற நில அளவையாளருக்கு எதிராக குற்றச்சாட்டுப் பேரவைக்கு அறிக்கையிடப்பட வேண்டும்.

46. (1) பதிவுபெற்ற சில அளவையாளருக்கு எதிரான தொழில்சார் பிறழ்நடத்தை பற்றிய ஒவ்வொரு குற்றச்சாட்டும் குற்றச்சாட்டுச் செய்யும் ஆளினால் கையொப்பமிடப்பட்டு எழுத்தில் பேரவைக்கு அறிக்கையிடப்படல் வேண்டும். அத்துடன் விசாரணை ஒன்று நடாத்தப்படவேண்டிய ஒன்று என்று பேரவைக்குத் தோன்றினால், அத்தகைய விசாரணைக்காக நேரத்தையும் இடத்தையும் பேரவை நிர்ணயித்தல் வேண்டும்.

(2) பேரவையானது ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட நில அளவையாளருக்கு எதிரான உயர்தொழில்சார் பிறழ் நடத்தை பற்றிய ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை ஒன்றை நடத்துதல் வேண்டும். அத்துடன் பேரவையானது அவசியம் ஏற்படுகின்றவிடத்து, அத்தகைய விசாரணையை நடத்துவதில் பேரவைக்கு உதவுவதற்காக நிலம் அளத்தல் தொழிற்துறையில் உள்ள அல்லது வேறு ஏதேனும் துறையில் உள்ள தகுதிவாய்ந்த எவரேனும் ஆளின் சேவையைப் பெறலாம்.

(3) அத்தகைய விசாரணைக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு ஆகக்குறைந்தது இருபத்தெட்டு நாட்கள் உள்ளதாக விசாரணைக்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்தையும் இடத்தையும் தெரிவித்தும் அவருக்கு எதிராக செய்யப்பட்ட எல்லாக் குற்றச்சாட்டுக்களினதும் பிரதி ஒன்றை வழங்கியும் எழுத்திலான அறிவித்தல் அத்தகைய நிலஅளவையாளரின் ஆளின் கடைசியாகத் தெரிந்த அஞ்சல் முகவரிக்கு செயலாளரால் அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் நடைபெறும் விசாரணை ஒன்றில் –

(அ) குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நில அளவையாளர் அவருடைய எதிர்வாதத்தை கேட்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பேரவையானது –

(1) துறைநுட்பக்கூறுகளையும் சட்டவிதிமுறைகளையும் கவனத்தில் எடுக்காது ஒப்புரவு, நல்லுணர்வு மற்றும் விடயத்தின் கணிசமான அளவு குறைநலன்கள் என்பவற்றுக்கிணங்க செயலாற்றுதல் வேண்டும் ; அத்துடன்

(2) சான்று பற்றிய விதிகளினால் கட்டுப்படுத்தப் படமாட்டாது ; ஆனால், அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறாக அத்தகைய முறையில் ஏதேனும் விடயம் பற்றி அதாகவே தெளிவடைய முடியும்.

(5) அத்தகைய விசாரணையின் மீதான பேரவையின் முடிவானது எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விசாரணையை நடாத்திய பேரவையின் ஆகக் குறைந்தது இரண்டு உறுப்பினர்களால் ஒப்பமிடப்பட்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அது செயலாளரால் மேலொப்பமிடப்படல் வேண்டும்.

(6) பேரவை விசாரணை தொடர்பிலான அதன் முடிவுக்கான காரணங்களைக் கொடுத்தல் வேண்டும்.

பேரவையின் ஒழுக்காற்றுத் தத்துவங்கள்.

**47.** (1) பேரவையானது இந்தப் பாகத்திற்கிணங்க விசாரணை ஒன்றை நடாத்திய பின்னர், பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவர் உயர்தொழில்சார் பிறழ் நடத்தைக்கும் குற்றவாளியாக இருக்கின்றார் என்று திருப்திப்படுகின்றவிடத்து, பேரவை பின்வரும் கட்டளைகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை ஆக்கலாம் :—

(அ) பதிவுபெற்ற நில அளவையாளரின் பதிவு நீக்க வேண்டுமெனவும் அத்தகைய நில அளவையாளர் பெயர், இடாப்பிலிருந்து அகற்றப்பட வேண்டுமெனவும் கட்டளை ஒன்றை ஆக்கலாம் ;

(ஆ) மூன்று வருடங்களை விஞ்சாததான காலப்பகுதிக்குப் பதிவுபெற்ற நில அளவையாளரின் பதிவை இடைநிறுத்தல் செய்யவேண்டுமென கட்டளை ஒன்றை ஆக்கலாம் ;

(இ) பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட வருடாந்த தொழில்புரி உரிமம் நீக்கப்பட வேண்டும் என்று கட்டளை ஒன்றை ஆக்கலாம் ;

(ஈ) பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட வருடாந்தத் தொழில்புரி உரிமம் இடைநிறுத்தப்பட வேண்டும் என்று கட்டளை ஒன்றை ஆக்கலாம் ;

(உ) பதிவுபெற்ற நில அளவையாளர் பேரவையினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக மூன்று வருடங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றாக நிலம் அளத்தல் தொழிலில் ஈடுபடலாம் என்று கட்டளை ஒன்றை ஆக்கலாம் ;

(ஊ) செலவுத் தொகைகள் தொடர்பிலான அல்லது வேறு வகையில் பேரவை தோதானதெனக் கருதுகின்ற வேறு ஏதேனும் தோதான கட்டளையை ஆக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் பதிவை இடைநிறுத்தும் ஏதேனும் கட்டளை வலுவில் இருக்கும்போது இச்சட்டத்தின் நோக்கத் திற்காக அவ்வாள் பதிவுசெய்யப்பட்டிராத ஆளாகக் கருதப் படுதல் வேண்டும். ஆனால், கட்டளை முடிவடைந்ததன் மேல் உடனடியாக பதிவுபெற்ற ஒரு நில அளவையாள ரைப்போன்று அவருடைய உரிமைகளும், சிறப்புரிமைகளும் அவ்வாறு முடிவடைந்த திகதியிலிருந்து மீண்டும் நடை முறைக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான எல்லாச் செலவுத் தொகைகளும் செலவீனங்களும் பேரவைக்குச் செலுத்த வேண்டியிருக்கின்ற கடன் ஒன்றைப்போன்று மீளப்பெறப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

கேட்கப் படுவதற்கான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட நில அளவை யாளரின் உரிமை.

**48.** நாற்பத்தாறாம் பிரிவின்கீழ் எந்தப் பதிவுபெற்ற நில அளவையாளர் தொடர்பில் விசாரணை ஒன்று நடத்தப்படு கின்றதோ அந்தப் பதிவுபெற்ற ஒவ்வொரு நில அளவை யாளரும் விசாரணையில் நேர்முகமாகவோ அல்லது அவருடைய பிரதிநிதிமூலமாகவோ தோன்றுவதற்கும் தம் திறம் கேட்கப்படு வதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

பேரவையின் முடிவுகளி லிருந்தான மேன்முறை யீடுகள்.

**49.** (அ) அவரால் செய்யப்பட்ட பதிவுக்கான விண்ணப்பம் ஒன்று அல்லது வருடாந்த தொழில்புரி உரிமம் ஒன்று வழங்குதல் தொடர்பில் பேரவையின் ஏதேனும் முடிவுடன்;

(ஆ) அவர் தொடர்பில் 47 ஆம் பிரிவின்கீழ் செய்யப் பட்ட பேரவையின் ஏதேனும் கட்டளையுடன்,

திருப்தியடையாத ஒவ்வோர் ஆளும் செயலாளரால் அம் முடிவு அல்லது அக்கட்டளை பற்றிய அறிவித்தல் அவருக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னர் முப்பது நாட்களுக்குள்ளாக விடயத்திற் கேற்றாற்போன்று முடிவுக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

இடாப்பில் பதியப்பட வேண்டிய நீக்குதல் அல்லது நிறுத்தி வைத்தல் அல்லது நிபந்தனைகள்.

**50.** இயைபான நில அளவையாளர் தொடர்பிலான பதிவுக்கு எதிராக அவருடைய பதிவு அல்லது வருடாந்த தொழில்புரி உரிமம் நீக்கப்பட்டுள்ளது அல்லது இவை இரண்டும் நீக்கப்பட்டுள்ளன என்ற நிகழ்வையும் அத்துடன் 47 ஆம் பிரிவின்கீழ் நிலம் அளத்தல் தொழிலைப் புரிவதற்காக அவரின்மீது விதிக்கப்பட்ட எவையேனும் நிபந்தனைகளையும் செயலாளர் இடாப்பில் பதிதல் வேண்டும்.

சான்றிதழ்களை ஒப்படைத்தல்.

**51.** (1) இந்தச் சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பதிவுபெற்ற எந்த நில அளவையாளரின் பதிவு அல்லது வருடாந்த தொழில்புரி உரிமம் நீக்கப்பட்டிருக்கின்றதோ அல்லது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றதோ பதிவுபெற்ற அந்த நில அளவையாளர் ஒவ்வொருவரும் விடயத்திற்கேற்றாற்போல அந்த நீக்கம் அல்லது இடைநிறுத்தம் பற்றிய எழுத்திலான அறிவித்தல் எத்திகதியில் அவருக்குக் கொடுக்கப்பட்டதோ அத்திகதியின் பின்னர் பதினான்கு நாட்களுக்குள்ளாக இச்சட்டத்தின்கீழ் அவருக்கு வழங்கப்பட்டு அத்திகதிக்கு முன்னர் அல்லது அவரால் ஒப்படைக்கப்படாதிருக்கின்ற சான்றிதழ்களைச் செயலாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறும் பதிவுபெற்ற நில அளவையாளர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்க முறையான விளக்கம் ஒன்றின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

குழுக்கள்.

**52.** (1) பேரவையானது காலத்திற்குக்காலம் பேரவையின் மூன்று உறுப்பினர்களுக்கு மேற்படாததும் பொருத்தமானது எனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட குழுக்களை, 37 ஆம் 46 ஆம் பிரிவுகள் மூலம் பேரவைக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் தவிர்ந்த பேரவையின் பணிகளின் நோக்கெல்லைக்குள் வரும் ஏதேனும் விடயம் பற்றி விசாரிப்பதற்கும் பேரவைக்கு அறிக்கையிடுவதற்கும் என நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவும் எல்லா விடயங்களிலும் பேரவையின் கட்டுப்பாட்டுக்கமைந்ததாதல் வேண்டும்.

**50.** இயைபான நில அளவையாளர் தொடர்பிலான பதிவுக்கு எதிராக அவருடைய பதிவு அல்லது வருடாந்த தொழில்புரி உரிமம் நீக்கப்பட்டுள்ளது அல்லது இவை இரண்டும் நீக்கப்பட்டுள்ளன என்ற நிகழ்வையும் அத்துடன் 47 ஆம் பிரிவின்கீழ் நிலம் அளத்தல் தொழிலைப் புரிவதற்காக அவரின்மீது விதிக்கப்பட்ட எவையேனும் நிபந்தனைகளையும் செயலாளர் இடாப்பில் பதிதல் வேண்டும். இடாப்பில் பதியப்பட வேண்டிய நீக்குதல் அல்லது நிறுத்தி வைத்தல் அல்லது நிபந்தனைகள்.

**51.** (1) இந்தச் சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பதிவுபெற்ற எந்த நில அளவையாளரின் பதிவு அல்லது வருடாந்த தொழில்புரி உரிமம் நீக்கப்பட்டிருக்கின்றதோ அல்லது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றதோ பதிவுபெற்ற அந்த நில அளவையாளர் ஒவ்வொருவரும் விடயத்திற்கேற்றாற்போல அந்த நீக்கம் அல்லது இடைநிறுத்தம் பற்றிய எழுத்திலான அறிவித்தல் எத்திகதியில் அவருக்குக் கொடுக்கப்பட்டதோ அத்திகதியின் பின்னர் பதினான்கு நாட்களுக்குள்ளாக இச்சட்டத்தின்கீழ் அவருக்கு வழங்கப்பட்டு அத்திகதிக்கு முன்னர் அல்லது அவரால் ஒப்படைக்கப்படாதிருக்கின்ற சான்றிதழ்களைச் செயலாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். சான்றிதழ்களை ஒப்படைத்தல்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறும் பதிவுபெற்ற நில அளவையாளர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்க முறையான விளக்கம் ஒன்றின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

**52.** (1) பேரவையானது காலத்திற்குக்காலம் பேரவையின் மூன்று உறுப்பினர்களுக்கு மேற்படாததும் பொருத்தமானது எனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட குழுக்களை, 37 ஆம் 46 ஆம் பிரிவுகள் மூலம் பேரவைக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் தவிர்ந்த பேரவையின் பணிகளின் நோக்கெல்லைக்குள் வரும் ஏதேனும் விடயம் பற்றி விசாரிப்பதற்கும் பேரவைக்கு அறிக்கையிடுவதற்கும் என நியமிக்கலாம். குழுக்கள்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவும் எல்லா விடயங்களிலும் பேரவையின் கட்டுப்பாட்டுக்கமைந்ததாதல் வேண்டும்.

ஆண்டு அறிக்கை.

**53.** (1) பேரவையானது, அதனது பணிகளையும், கடமைகளையும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் அத்துடன் அதனது தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் ஒவ்வோர் ஆண்டும் அமைச்சருக்கு அறிக்கை ஒன்றைச் செய்தல் வேண்டும்.

(2) அத்தகைய ஆண்டறிக்கையின் பிரதி ஒன்று, அது அமைச்சரால் பெறப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாக பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படல் வேண்டும்.

கல்வியைத் தொடர்தல்.

**54.** (1) பேரவையானது, பதிவுபெற்ற நில அளவையாளர்களை நிலம் அளத்தல் தொழிலில் அவர்களுடைய அறிவையும் தேர்ச்சியையும் பேணிக்காத்து மேம்படுத்தும் நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றுக்குள் குறித்துரைக்கப்பட்ட பயிற்சிநெறிகளுக்குச் சமுகமளிக்குமிடத்தும் குறித்துரைக்கப்பட்ட அனுபவத்தைப் பெறுமாறும் அல்லது வேறு தோதான நடவடிக்கையை எடுக்குமாறு தேவைப்படுத்தலாம்.

(2) பேரவையானது –

(அ) வருடாந்தத் தொழில்புரி உரிமம் ஒன்று வழங்கப்பட்ட பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவர்

(1) ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகள் எதனுடனும் இணங்கியொழுகவில்லை என்று ;

திருப்திப்படுகின்றவிடத்து, பேரவையானது–

(i) இத்தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படும்வரை அத்தகைய பதிவுபெற்ற நில அளவையாளரின் வருடாந்தத் தொழில்புரி உரிமத்தை இடைநிறுத்தலாம் ;

(ii) அவ்வருடாந்தத் தொழில்புரி உரிமம் எக்காலப்பகுதிக்காகப் புதுப்பிக்கப்படுகின்றதோ அந்த நியம காலப்பகுதியைக் குறித்துரைக்கின்ற நிபந்தனை ஒன்றை உள்ளடக்கக்கூடியதாக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக அத்தகைய பதிவுபெற்ற நில அளவையாளரின் வருடாந்தத் தொழில்புரி உரிமத்தைப் புதுப்பிக்கலாம் ;

(iii) அந்தத் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படும் வரை பதிவுபெற்ற அத்தகைய நில அளவையாளரின் வருடாந்தத் தொழில்புரி உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு மறுக்கலாம் ; அல்லது

(ஆ) அரசாங்க சேவையில் உள்ள பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவர் 1 ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகவில்லை என்று திருப்திப்படுகின்றவிடத்து பேரவையானது அத்தகைய இணங்கியொழுகாமை பற்றி பொருத்தமான நடவடிக்கைக்காக நில அளவையாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடலாம்.

பேரவையின் பணியாட்டொகுதி.

**55.** (1) பேரவையானது அதனது பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்காக அது அவசியமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அமைச்சரின் அங்கீகாரத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) பேரவையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க அலுவலர் எவரேனும், அந்த அலுவலரினதும் அரசாங்க நிர்வாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பானவரான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்று சம்மதத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து 1991 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்க

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுக்கொண்டுள்ளவரான ஆள் ஒருவரை பேரவை வேலைக்கமர்த்துமிடத்து, அந்த ஆள் பேரவையின் சேவையில் இருந்த காலப்பகுதி எதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றிய சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

பேரவையின் நிதியம்.

**56.** (1) பேரவையானது அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இது இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2)(அ) திரட்டிய நிதியத்திலிருந்து பேரவைக்குக் கிடைக்கக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இந்தச் சட்டத்தின்கீழ் அதனது தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் பேரவையால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; மற்றும்

(இ) கொடைகள், மானியக்கொடைகள் அல்லது நன்கொடைகள் என்றவகையாக பேரவையினர் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

பேரவையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் பேரவையின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலில், புரிவதில், நிறைவேற்றுவதில்

அதனால் உறப்படும் செலவினத்தைச் சமாளிப்பதற்கு தேவைப் படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகை களையும், அத்துடன் இச்சட்டத்தினால் நிதியத்திலிருந்து செலுத்துவதற்கு தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

**57.** (1) பேரவையின் நிதியாண்டும் பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) பகிரங்க கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிதியத்தினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

விபரத் திரட்டுகளும் தகவலும்.

**58.** (1) பேரவை இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு இயலுவதாக்கும் நோக்கத்திற்காக, பேரவை அல்லது அதற்கெனப் பேரவையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், வெளிக்களக் குறிப்புக்களினதும் வரைபடங்களினதும், அல்லது நிலப்படங்களினதும் மூலப்பிரதிகள் உட்பட, அத்தகைய நில அளவையாளர் அறிந்திருக்கக்கூடியவாறான அல்லது அவரது உடைமையில் இருக்கக்கூடியவாறான நிலம் அளத்தல் தொழில் பற்றியனவும் அவரால் மேற்கொள்ளப்படும் தொழில்முறை பற்றியனவுமான அத்தகைய எல்லா விபரத்திரட்டையும் தகவலையும், அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக பேரவையின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளிடம் கொடுத்துதவுமாறு பதிவுபெற்ற எவரேனும் நில அளவையாளரை எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் ஒன்றின்மூலம் ஏதேனும் விபரத்திரட்டினை அல்லது தகவலினைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்பட்டவரான நில அளவையாளர் ஒவ்வொருவரும், ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய விபரத்திரட்டினை ஆக்குவதிலிருந்து அல்லது அத்தகைய தகவலை வெளியிடுவதிலிருந்து அவர் தடுக்கப்பட்டுள்ளவிடத்துத் தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையானதாதல் வேண்டும்.

(3) பேரவை அல்லது அதனது எவரேனும் உறுப்பினர் அல்லது பேரவையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் பேரவையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காகத் தவிர அல்லது நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும் போதன்றி (1) ஆம் உட் பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட எவையேனும் திரட்டுக்களை அல்லது தகவலை எவரேனும் ஆளுக்கு வெளியிடுதல் ஆகாது அல்லது பயன்படுத்துதல் ஆகாது.

பேரவையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்கு உட்பட்ட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றெனக் கருதப்படுதல்.

**59.** பேரவையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடு கள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

பேரவையின் உறுப்பினர் களும் அலுவலர் களும் சேவை யாளர்களும் பகிரங்க சேவை யாளர்களாகக் கருதப்பட வேண்டு மென்பது.

**60.** பேரவையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட் படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அசைவுள்ளதும் அசைவற்றது மான அரச ஆதனத்தை பேரவைக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்தல்.

**61.** (1) அரசின் அசைவற்ற ஏதேனும் ஆதனம் பேரவையின் ஏதேனும் நோக்கத்திற்காகத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது அரச காணிக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தின் சிறப்பு மானியக் கொடை அல்லது குத்தகையொன்று செய்யப்படக்கூடிய நோக்கமெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற் கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், பேரவைக்கான அத்தகைய ஆதனத்தின் சிறப்பு மானியக்கொடையொன்றிற்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஏதேனும் ஆதனம் பேரவையின் நோக்கத்திற்குத் தேவைப்படுமிடத்து, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் பேரவைக்கு கைமாற்றி அதற்குரித்தாக்கலாம்:

ஆயின், எவ்வாறிருப்பினும், அரசின் அசைவுள்ள ஏதேனும் ஆதனத்தைப் பாதிக்கின்ற கட்டளை எதுவும் அத்தகைய ஆதனத்தின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கின்ற அமைச்சரின் ஒருப்பாடு இன்றி, இவ் உட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரால் ஆக்கப்படுதலாகாது.

காணிச் கொள்ளற் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளல்.

**62.** (1) அசைவற்ற ஆதனம் எதுவும், பேரவையின் ஏதேனும் நோக்கத்திற்காகக் கொள்ளப்படத் தேவைப்படுமிடத்தும், அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அந்நோக்கத்திற்காக உத்தேசிக்கப்பட்ட கொள்ளலை அங்கீகரிக்குமிடத்தும், அத்தகைய ஆதனம் பொதுநோக்கமொன்றுக்குத் தேவைப்படுகின்றதெனக் கருதப்படவேண்டுமென்பதோடு அதற்கிணங்க காணி கொள்ளற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு பேரவைக்கு கைமாற்றவும்படலாம்.

(2) காணி கொள்ளற் சட்டத்தின்கீழ் பேரவைக்கென அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை கொள்வதற்குச் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் பணத்தொகை பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மேல் எடுக்கப்பட்ட செயலுக்கான பாதுகாப்பு.

**63.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் பேரவையினால் நன்நோக்கத்துடன் செய்யப்படும் ஏதேனும் செயலுக்காக பேரவைக்கு எதிராக, அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின்மேல் அவரினால் நன்நோக்கத்துடன் செய்யப்படும் ஏதேனும் செயலுக்காக பேரவையின் எந்தவோர் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அல்லது குழுவின் அலுவலர் ஒருவருக்கு எதிராக, துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுத்தலாகாது.

(2) இந்தச் சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின்மீது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் அவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நன்நோக்கத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதின், பேரவையின் நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

தவறுகள்.

**64.** (அ) இப்பாகத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலை கொடுத்துதவத் தவறுகின்ற;

(ஆ) அவரால் கொடுத்துதவப்படும் அத்தகைய விபரத்திரட்டு அல்லது தகவல் எதிலும் தெரிந்துகொண்டே பொய்யான கூற்றினைச் செய்கின்ற ;

(இ) பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவராகப் பதிவுசெய்துகொள்ளும் நோக்கத்திற்காக அல்லது வருடாந்தத் தொழில்புரி உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக —

(i) அவரது அறிவுக்கு எட்டியவரை ஏதேனும் முக்கிய விடயத்தில் பொய்யான அல்லது தவறாக வழி நடத்தும் வெளிப்படுத்துகையை அல்லது வகைக் குறிப்பை ஒன்றில் வாய்மூலமாக அல்லது எழுத்துருவில் செய்கின்ற ; அல்லது

(ii) அத்தகைய ஏதேனும் பொய்யான வெளிப்படுத்துகையை அல்லது வகைக் குறிப்பைக் கொண்டிருக்கின்றதெனத் தெரிந்துகொண்டு அத்தகைய ஏதேனும் ஆவணத்தை பேரவைக்குக் காண்பிக்கின்ற அல்லது பயன்படுத்துகின்ற ;

(ஈ) பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவராக இல்லாதிருந்து கொண்டு —

(i) பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவர் என்று பொய்யாகப் பாசாங்கு செய்கின்ற ;

(ii) பதிவுபெற்ற நில அளவையாளர் ஒருவரின் பெயரை அல்லது பதவிப்பெயரை எடுக்கின்ற அல்லது பயன்படுத்துகின்ற,

(உ) பதிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் ஒருவராக இருந்து கொண்டு,

(i) கட்டணத்திற்காக அல்லது வெகுமதிக்காக நிலம் அளத்தல் தொழிலைப் புரிகின்ற ;

(ii) பதிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் ஒருவராக இருக்கின்றார் என்று உட்கிடையாகத் தெரிவிக்கும் வகையில் பதவிப்பெயரை அல்லது விவரணத்தை எடுக்கின்ற அல்லது பயன்படுத்துகின்ற ;

(iii) நில அளவையைப் புரிவது தொடர்பில் அத்தாட்சிப் படுத்துகின்ற ;

(iv) இந்தச் சட்டத்தின்மூலம் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்மூலம் பதிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் ஒருவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் நில அளவை வரைபடத்தை, வரிப் படத்தை, நிலப்படத்தை அல்லது வேறு ஆவணத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற அல்லது அவற்றில் ஒப்பமிடுகின்ற ; அல்லது

(ஊ) பேரவையின் உறுப்பினர் ஒருவராக, அலுவலர் ஒருவராக அல்லது சேவையாளர் ஒருவராக இருந்துகொண்டு, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அவருடைய தத்துவங்களைப் பிரயோகித்தலில் அல்லது பணிகளை நிறைவேற்றுவதில் அல்லது அவை தொடர்பில் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் தகவலை இச்சட்டத்தின் இப்பாகத்தினால் அத்தகைய தகவலை எந்நோக்கத்திற்காக வெளிப்படுத்துவதற்கு அவர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அந்நோக்கத்திற்காக எவரேனும் ஆளுக்கு வெளிவிடுகின்ற ; அல்லது

(எ) இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாட்டை மீறுகின்ற,

ஒவ்வோர் ஆளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டின்மூலம் தண்டனை எதுவும், வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாத தவறொன்றை இச்சட்டத்தின்கீழ் புரியும் ஒவ்வோர் ஆளும் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கான மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது —

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமாயின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது அலுவலரும் ;

(ஆ) அந்த ஆட்கள் குழுவானது குழுமம் ஒன்றாயின், அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

அந்த தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவில் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் அத்தகைய தவறு அவரது அறிவுக்கெட்டாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோகித்தார் என எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளி எனக் கருதப்படுதல் ஆகாது.

ஒழுங்குவிதிகள். **65.** (1) அமைச்சர் விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தின் இப்பாகத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமத்திற்காகவும் அது தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்கள் அல்லது ஏதேனும் கருமம் தொடர்பாக அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம் —

(i) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தேவைப்படுத்தப்படும் இடாப்புகளின் படிவமும் அவற்றை வைத்திருக்கும் முறையும் ;

(ii) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் படிவங்கள், விண்ணப்பங்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு ஆவணங்கள் ;

(iii) வருடாந்தத் தொழில்புரி உரிமத்தைப் பெறுவதற்கு விரும்பும் நில அளவையாளர் ஒருவரால் பின்பற்றப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் கற்கை நெறியும் பயிற்சியும் ;

(iv) உயர்தொழிற் தொழில்முறை தொடர்பாக நில அளவையாளராகப் பதிவுசெய்யப்படுவதற்கான வழிகாட்டுநெறி.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதகாலப்பகுதி ஒன்றினுள் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகரிக்கப்படாத தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகவும் கருதப்படுதலும் வேண்டும்.

(5) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி எதுவும் அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டிய தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல். **66.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"வான்வழிப் புகைப்படம்" என்பது புவியின் மேற்பரப்புக்கு மேலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படம் அல்லது தொலை உணர்வு பிம்பம் எனப் பொருள்படும்;

"வான்வழி நில அளவை" என்பது வான்வழிப் புகைப் படம் மூலம் அளவைகளைப் பெறும் அறிவியல் முறை எனப் பொருள்படும்;

"நிலவுரித்து நிலப்படம்" என்பது நிலவுரித்து நில அளவை ஒன்றில் இருந்து பெறப்படும் நிலப்படம் ஒன்று எனப் பொருள்படும்;

"நிலவுரித்து நில அளவை" என்பது நிலத்தின் ஏதேனும் துண்டின் அல்லது வளவுகளின் எல்லையை அல்லது அவற்றோடு இணைந்துள்ள எவையேனும் உரிமை களின் அல்லது அக்கறைகளின் அளவை எல்லை குறிக்கும், தீர்மானிக்கும் அல்லது வரையறுக்கும் நோக்கத்துக்கான ஏதேனும் நில அளவை எனப் பொருள்படும்;

"திணைக்களம்" என்பது நில அளவைத் திணைக்களம் எனப் பொருள்படும்;

"நிலம்" என்பது கீழ்ப்படைமண் வான்வழி இடைவெளி, நீர் மற்றும் கடல் பரப்பு என்பவற்றை உள்ளடக்குவ தோடு நிலத்திலுள்ள அல்லது அதன் மீதான உரிமைகளையும் அக்கறைகளையும் உள்ளடக்கும்;

"நில அளவை" என்பது –

(அ) புவியின் ஏதேனும் பாகத்தின் வடிவம், உருவரை, நிலம், பரப்பு, அமைப்பு, உயரம், ஆழம் அல்லது தன்மை அல்லது ஏதேனும் இயற்கை யான அல்லது செயற்கையான அம்சங்கள் அத்துடன் புவிமீது அல்லது புவிக்குக்கீழ் அல்லது புவிக்கு மேல் ஏதேனும் பாகத்தில் உள்ள

எல்லைக்கோடுகளின் நிலை, நீளம் மற்றும் திசை என்பவற்றை எல்லையிடும் நோக்கங்களுக்காகத் தீர்மானித்தல் அல்லது தாபித்தல் என்று ;

(ஆ) நிலத்தில் அல்லது வான்வழி இடைவெளியில் ஏதேனும் உரிமையின் அக்கறையின் அளவை தீர்மானித்தல் அல்லது தயாரித்தல் என்று ;

(இ) அமைவிடத் தோற்றத்தினைச் சான்றுப்படுத்துகின்ற நோக்கத்திற்காக எல்லை ஒன்றுடன் தொடர்புபட்ட அமைவிடத்தின் ஏதேனும் தோற்றத்தினை தீர்மானித்தல் என்று பொருள்படும் ; அத்துடன் (அ) (ஆ) அத்துடன் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட பணிகளின் நோக்கத்திற்காக,

(i) நிலவுரித்துடன் நிலஅளவையையும் ;

(ii) ஏதேனும் திட்ட ஒழுங்கின் வலையமைப்பொன்றைத் தொகுத்தலையும் ;

(iii) ஏதேனும் வரைபடத்தை அல்லது நிலப்படத்தை தயாரித்தலையும் ; அத்துடன் ;

(iv) ஒளிப்பட அளவைகூர் நிலக் கட்டுப்பாட்டு நிலையங்களைத் தயாரித்தலையும் ;

உள்ளடக்கும்.

"நிலப்படம்" என்பது புவியின் ஒரு பகுதி தொடர்பிலான அல்லது புவி முழுவதும் தொடர்பிலான (இயற்கையான அல்லது செயற்கையான அல்லது இரண்டும் அடங்கிய) அம்சங்களை அல்லது வேறு தகவலை வரைபு அல்லது புகைப்பட அல்லது எண்மான உருவடிவத்தில் அல்லது இவ்வடிவங்களின் சேர்க்கையில் ஓர் அளவிடையின் படியான அல்லது நிலப்படத்தின்படியான வகைக்குறிப்புரு ஒன்று எனப் பொருள்படும்.

"வரைபடம்" என்பது ஏதேனும் நில அளவையின் வரைபுகூர் வகைக்குறிப்பு எனப் பொருள்படும் ;

"பதிவு பெற்ற நில அளவையாளர்" என்பது இந்தச் சட்டத்தின்கீழ் பேரவையினால் பதிவுசெய்யப்பட்ட நில் அளவையாளர் எனப் பொருள்படும் ;

"பதிவு செய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளர்" என்பது வருடாந்தத் தொழில்புரி உரிமம் வழங்கப்பட்ட பதிவுபெற்ற நில அளன்வையாளர் ஒருவர் எனப் பொருள்படும் ;

"உரித்துப் பதிவுச் சட்டம்" என்பது 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டம் எனப் பொருள்படும் ;

"செயலாளர்" என்பது பேரவையின் செயலாளரொருவராக நியமிக்கப்பட்ட ஆள் எனப் பொருள்படும் ;

"நில அளவையாளர் தலைமை அதிபதி" என்பது நில அளவைத் திணைக்களத்தின் தலைவராக இருக்கின்ற பதிவு பெற்ற நில அளவையாளர் ஒருவர் எனப் பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**67.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை (பிரிவு – 39)

ஆளொருவர் பதிவுசெய்யப்படுவதற்கு உரித்துளிக்கும் தகைமைகள் –

(அ) கல்விசார் தகைமைகள் –

(i) பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது நிறுவனம் ஒன்றிலிருந்து நிலம் அளத்தல் தொழிலில் பெற்ற பட்டப்பின்படிப்பு டிப்புளோமா அல்லது நிலம் அளத்தல் தொழிலில் பெற்ற உயர் தகைமை, அல்லது

(ii) பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது நிறுவனம் ஒன்றிலிருந்து நிலம் அளத்தல் தொழிலில் பெற்ற இளநிலைப்பட்டதாரிப் பட்டம், அல்லது

(iii) தியத்தலாவை நில அளவை மற்றும் நிலப்பட அமைப்பு நிறுவகத்தின் நில அளவை தொழில்நுட்பவியலர் டிப்புளோமா பட்டம் (உயர்தரம்)

(ஆ) தொழில்முறை அனுபவம் :–

(i) மேலே உள்ள (அ) (i) என்னும் பகுதிக்கு, பேரவை திருப்திப்படுமளவுக்கு ஆகக்குறைந்தது இரண்டு வருட தொழில்முறை அனுபவம் ;

(ii) மேலே உள்ள (அ) (ii) என்னும் பகுதிக்கு, பேரவை திருப்திப்படுமளவுக்கு ஆகக்குறைந்தது மூன்று வருட தொழில்முறை அனுபவம் ;

(iii) மேலே உள்ள (அ) (iii) என்னும் பகுதிக்கு பேரவை திருப்திப்படுமளவுக்கு ஆகக்குறைந்தது பத்து வருட தொழில்முறை அனுபவமும் நில அளவைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கனிஷ்ட தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்திருத்தலும் ; அல்லது

பேரவை திருப்திப்படுமளவுக்கு ஆகக்குறைந்தது பதினைந்து வருட தொழில்முறை அனுபவமும் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்குரிய உயர்தொழில்சார் தகுதியைக் கொண்டிருக்கின்றார் என்று நில அளவையாளர் தலைமை அதிபதியின் விதப்புரையும்.